Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 02 (19.08.2004) வியாழக்கிழமை இதழ் :321


றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, பருத்தித்துறை.

## படுகொலைகளைத் தடுப்பதற்கு


# திராணியற்ற நிலையில் கண்காணிப்புக்குழு

# பாதுகாப்புச் செயலர் சிறில் ஹேரத் விசனம்!

(கொழும்பு)

***அண்மைக் காலமாக கொழும்பு நகரிலும் கிழக்கு மாகாணத்திலும் இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்கள் – போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயலூக்கமற்ற தன்மையையே காட்டுவதாகவும்,***

***இதனால் – அரச படையினரே இத்தகைய படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என உத்தரவிட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.***



அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் கண்காணிப்புக்குழு மீது விசனம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மை நாட்களாக தமது பகையாளிகளைக் கொலைசெய்து வருகின்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயலூக்கமற்ற தன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் திடீர் சுற்றிவளைப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பகுதி நேற்று படையினரின் திடீர் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டது.

வாழைச்சோனைப் பகுதிக்குள் நுழையும் பிரதான வீதிகளை மறித்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் அதிகாலை 5 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை வாகனங்களையோ, பொது மக்களையோ வாழைச்சேனைப் பிரதேசத்திலிருந்து வெளியே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு தமிழர்கள் ஓமந்தையில் கைது!

(வவுனியா)

போலி அடையாள அட்டையுடன் ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடக்க முயன்றதாகக்கூறி பெண் ஒருவர் உட்பட இரு தமிழர்களைப் படையினர் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் ஓமந்தை சோதனைச்சாவடியில் கைது செய்யப்பட்ட இவர்களை ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் படையினர் ஒப்படைத்ததாகத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு - சிலாவத்தை மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த மைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகத்திற்குரிய இழுவைக்கப்பல்

# கண்காணிப்புக் குழுவின் விசாரணைகள் ஆரம்பம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான இழுவைப் படகு ஒன்றிலிருந்து ஆயுதங்களை விடுதலைப் புலிகள் தரையிறக்கியதாக கடற்படையினர் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான இழுவைப் படகொன்றிலிருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்கியதாக கடற்படையினர் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துளளனர்.

கடற்படையினரின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே- அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைத் தரையிறக்கிய குற்றச்சாட்டுக்கள் தொடா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைப்படி

# ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தினால் உண்ணாவிரதமிருந்து உயிர்துறப்போம்!

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, ஜனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிக்க முனைந்தால், ஜே.வி.பி. கட்சியினர் உண்ணாவிரதமிருந்து உயிரைத் துறப்பர் என அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மகரகமவில் நேற்று நடைபெற்ற இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளின் யோசனைப்படி ஜனாதிபதி சந்திரிகா பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கினால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அரசுக்குள் நிரந்தர கொள்கையில்லை!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்துக்குள் நிரந்தரக் கொள்கை எதுவுமில்லை. புலிகளின் தீவு யோசனைகளுக்கு மாற்று யோசனையை அரசாங்கம் சமர்ப்பிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளை -

அப்படியானதொரு திட்டமேயில்லை என்கிறது ஜே.வி.பி. நடைமுறையில் பார்க்கும்போது நாட்டில் அரசாங்கம் ஒன்று இயங்கவில்லை. நிர்வாகம் சீரற்ற நிலையிலேயே காணப்படுகின்றது என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஏழு வயது சிறுமி மீது பாலியல் பலாத்காரம்!

## மன்னார் - பியர் பகுதியில் சம்பவம்

(மன்னார்)

தலைமன்னார் - பியர் பகுதியில் ஏழு வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த சிறுமி தனியார் கல்விநிலையத்துக்குச் சென்று விட்டுத் திரும்பிக்கொண்டிருக்கையில், வீதியால் வந்த ஒருவர் சிறுமியை அருகிலுள்ள குடிசை ஒன்றுக்குள் தூக்கிச் சென்று பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வேளை சிறுமி கூக்குரலிடவே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தைப் பகுதியில்

# ஓய்வுபெற்ற பொலிஸார் வீட்டில் சுட்டுக்கொலை!

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டதிலுள்ள வெலிகந்த பகுதியில் ஓய்வு பெற்ற பொலிஸ்காரர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் இடம் பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

வெலிகந்தவிலிருந்து 5 கிலோ மீற்றர் வடக்காகவுள்ள செலனப்பிட்டிய என்ற இடத்தில் தனது வீட்டிலிருந்த போதே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நடவடிக்கையை தடுக்க படையினருக்குத் தகுந்த உத்தரவு!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க தாம் உரிய பணிப்புரைகளை படையினருக்கு விடுத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய கட்டடத் தொகுதியை அமைக்கும் நிகழ்வில் பங்கு கொண்டபோதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது -

நாட்டின் பாதுகாப்பு - குறிப்பாக கொழும்பின் பாதுகாப்புத் தொடர்பாக மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும்போது சுமார் 300 விடுதலைப் புலிகள் கொழும்பில் தாக்குதலுக்காக பிரவேசித்திருப்பதான தகவல் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியை எவராலும் தடுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திர

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதிவான்கள்



இணுவில் அண்ணா தொழிலக உரிமையாளர் சுப்பர் பொன்னையா நடராசா யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இணுவில் அண்ணா தொழிலகத்தின் உரிமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *



யாழ. கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய அதிபரான வாமதேவர் ஜெயரட்ணம் அண்மையில் அகி... ...கை சமாதான நீதிவானாக யாழ். மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட இவர், இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 இல் பணியாற்றிவருகிறார். இவர் யாழ். குடாநாட்டின் பிரபல விளையாட்டுத்துறை விமர்சகராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு -
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆலோசனைக் கூட்டம்

மட்டுவில் வடக்கு கிழக்குப் பகுதி விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல் மற்றும் கடன் வசதிகள் வழங்குவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்கு மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். இதில் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (24)

## உள்ளூராட்சி வாரவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரபெருவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறும். பிரதேச சபைச் செயலாளர் பிரான்சிஸ் விக்டர், தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

## வருடாந்த மஹோற்சவம்

வேலணைப் பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்றுகாலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 நாட்கள் இடம் பெறும் இந்தத் திருவிழாவில் 26ஆம் திகதி தீமிதிப்பும், 27ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி தீர்த்தமும், 30ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.(99)

## தெய்வீகப் பேருரை

வடமராட்சி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய உற்சவ காலத்தில் விசேட நிகழ்வாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீகச்சாலை நிகழ்ச்சிகள் தொடரில் இன்று காலை 10 மணிக்கு 'ஞானமொழி பேசும் முகம்' என்னும் தலைப்பில் அருட்கவி சீ.விநாசித்தம்பி சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

## மீளாய்வுக் கூட்டம்

யுனிசெவ் நிறுவனத்தின் மீளாய்வுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 2002 ஆம் ஆண்டு முதல் 2006 வரையான காலப்பகுதியில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. இங்கு பல்வேறு திட்டங்கள் மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது.

## பெயர்ப்பலகை திரை நீக்கமும் மைதான திறப்பு நிகழ்வும்

மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில், மாவீரர் கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட விளையாட்டரங்கு, பெயர்ப் பலகை திரை நீக்கமும், மைதானத்திறப்பு விழாவும் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

சிறப்பு நிகழ்வாக பாடசாலைகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டி நடைபெறவிருக்கிறது. (21)


நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
அர்ஜீன், மீனா, சுவாதி நடிப்பில்
அன்பு சகோதரன்
(சி-2904)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை
அரவிந், சோனா, ரகுவரன் நடித்த
கையோடு கை
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ROAD TRIP
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்னும் சில தினங்கள் மட்டும்
கமல், சினேகா, ... நடித்த
வசூல்ராஜா MBBS
(சி-2725)
காட்சிநேரம்:-10.30, ...


## அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்



யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் மாவட்ட கடற்றொழில் பரிசோதகராக கடமையாற்றிய சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி கடந்த மே மாதம் 14ஆம் திகதியுடன் தனது 37 வருட அரச சேவையி லிருந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் மன்னார் பூநகரி, தாளையடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கடற்றொழில் பரிசோதக ராகவும், யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தில் மாவட்ட கடற்றொழில் பரிசோதகராகவும் கடந்த நான்கு வருடங்களாக மாவட்ட கடற்றொழில் பரிசோதகராகவும் கடமையாற்றினார். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளர். புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தின் திருப்பணிச் சபையின் உபதலைவராகவும், செயலாளராகவும் வடமராட்சி சன சமூக நிலையங்க்ளில் சமாசத் தலைவராகவும் இருந்துள்ளார்.

## மகளிர் இல்லம் திறப்பு விழா

(திருநெல்வேலி)


அன்னை 'கிருஷ்ணாபணி மகளிர் இல்லம்' நாளை மாலை 5.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. திருநெல்வேலி, பலாலி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த இல்லத்தை வணக்கத்துக்குரிய சுவாமி 'ஆத்ம கணானந்தஜி' திறந்து வைக்க இருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுவாமி சச்சிதானந்தரின் சமாதி தின பூசை

இமய ஜோதி சுவாமி சிவானந்தரின் சீடரும், இலங்கை திவ்ய ஜீவனசங்க தலைவரும், உலக பூரண யோக சமாச போதகருமான யோகி ராஜ சுவாமி சச்சிதானந்தர் சமாதி அடைந்த இரண்டாவது ஆண்டு நினைவையொட்டி பூசைகள் இன்று மாலை 5.30 மணிக்கு திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சுவாமி யோகேசநாதர் கலந்துகொள்ளவுள்ளனர்.


சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கண்காட்சியும், விற்பனையும்
எமது நிறைவாழ்வு இல்லச் சிறார்களினால் நெய்யப்பட்ட ஆடைகளும், உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்களும் 20.08.2004 தொடக்கம் 22.08.2004 வரை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 வரை சங்க மண்டபத்தில் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்படுகின்றன.
காண வாருங்கள்
இல்லச் சிறார்களுக்கு ஊக்கம் தாருங்கள்
விளம்பர அனுசரணை
ரசியன் புடவையகம்
பலாலி வீதி, திருநெல்வேலி.
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (C/2951) பணிப்பாளர் சபை.

இதயக்கோயில் மேவி நின்றாய்
நீங்கா இன்ப நிறைவு தந்தாய்
அலைமோதும் உலகினிலே உண்மை
அறிவு ஊட்டி வைத்தாய்.

சரண் அடைந்து சாதனை செய் என்றாய்
சாதனையில் சோதனைகள் வரும் என்றாய்
சோதனையை வென்றிட அடைக்கலம் தந்தாய்
போதனை தந்து சோதனையை வென்றிட அருள் தந்தாய

குருவின் வார்த்தையை சிரம்மேல் கொண்டாய்
நாடி வந்தவரை நன்நெறியில் நிற்கவைத்தாய்
சர்வ மதங்களும் நல்வழி காட்டும் என்றாய்
எங்கும் எல்லாம் இறைமயம் என்றாய்

பொன்னும் பொருளும் வேண்டாம்
உலகம் போற்றும் உறவும் வேண்டாம்
தன்னை அறிந்திட நீ தந்த போதனை போதும்
என்றும் நின் அருள் நிலைத்திட வேண்டும்.

சுய நலமற்ற வாழ்க்கை என்றுமே இன்பம் என்றாய்
அமைதியாக மனத்தை இருத்தி அவன் பணிபுரியென்றாய்
என்றும் எமை வழி நடத்திடவேண்டும்
சச்சிதானந்தில் மூழ்கிட அருள் தரவேண்டும்.

(சி-2949) - க.சூரசங்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றத் தடைச் சட்டம் குறித்து கத்தோலிக்க ஆயர்கள் அதிருப்தி!

இலங்கையில் அமுல் செய்யும்படி அழுத்தம் கொடுக்கப்படும் மதமாற்றத் தடைச்சட்டத்தின் குறித்த சரத்தின் ஒரு பகுதியையே தாம் முழுமையாக எதிர்ப்பதாக இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் - வறுமையிலும் நோயிலும் குடும்பப் பிரச்சினைகளிலும் அல்லலுறும் அப்பாவி மக்களுக்கு பல்வேறு சேவைகளையும், அடிப்படை வசதிகளையும் வழங்கிவரும் கிறிஸ்தவ நிறுவனங்கள், இந்தத் தடைச் சட்டத்தால் மிகவும் அதிக சிரமத்தை எதிர்நோக்கும்.

இத்தகைய ஒரு சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் வேறு மதத்தைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்துகொள்வதில் குழப்பம், குழந்தைகளை எந்த மதத்தில் வளர்ப்பது என்பதில் குழப்பம், காதல் திருமணத்தில் குழப்பம்,தாம் விரும்பும் மதத்தில் தாமாக விரும்பி இணைந்து கொள்வதற்குத் தடை என்று ஏராளமான சட்டப்பிரச்சினைகளை அனைத்து மதத்தினரும் எதிர்நோக்கவேண்டிய குழப்பநிலை உருவாகும்.

மதத் தடைச்சட்டம் என்பது அடிப்படை மனித உரிமைகளையும் சர்வதேச அடிப்படை மனித உரிமைகளையும், சர்வதேச விதிகளையும் மீறும் ஒரு சட்டம். ஒருவர் விரும்பாதவிடத்து அவரைக் கட்டாயப்படுத்தியோ அல்லது அழுத்தம் கொடுத்தோ அல்லது வேறு காரணங்களைக் காட்டியோ மதமாற்றம் செய்யமுற்படுவதைத் தடைசெய்யும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை வரவேற்கிறோம்.

ஆனால், தாங்களாக விரும்பினால் கூட அதைத் தடை செய்யக் கூடிய சட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவருவது அனைத்து மதங்களுக்கும் தீமையையே விளைவிக்கக் கூடியது. அது அடிப்படை மனித உரிமைக்கு எதிரானது.

ஏற்கனவே பௌத்த பீடாதிபதிகளின் சங்கம் பரிந்துரை செய்தது போன்று அனைத்து மதங்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஒரு பல்மத உயர் மட்ட சபையொன்றை உருவாக்கி அதன் ஒரு அங்கமாக சட்டநிபுணர்களையும் உள்வாங்கி அத்தகைய கட்டாய மதமாற்றத்தைத் தவிர்க்க முயற்சிப்பதே சிறந்த மார்க்கமாக இருக்கும்

மனித உரிமையை மதிக்கும் அனைத்து மக்களும், ஆர்வலர்களும், அறிஞர்களும் இத்தகைய மதத்தடைச்சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

### மினிபஸ் கட்டணங்கள் 23 ஆம் திகதி முதல் அதிகரிக்கும்

மினிபஸ்களின் கட்டணங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத்துறை அமைச்சில் கூடிய தனியார் மினிபஸ்களின் சங்கங்கள் இது தொடர்பாக ஆராய்ந்தன.

டீசலின் விலை உயர்ந்துள்ளமையால் தமக்கு மேலதிக செலவுகள் ஏற்படுவதாக மினிபஸ் சங்கத்தினர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் இதற்குத் தாம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா உறுதியளித்தார்.

# குற்றப் புலனாய்வு அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் குற்றப் புலனாய்வு அதிகாரி வி.பி.வெத்த சிங்கவை நீதிமன்றத்திற்கு ஆஜராகுமாறு கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கைது செய்ய சென்றிருந்தவேளை, முன்பிணை கோரி தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நடைபெற்றது.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல்.பீரிஸ் மற்றும் ராஜித சேனாரட்ண ஆகியோர் நீதிபதியின் அறைக்குச் சென்றார்களா? என குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி வி.பி.வெத்தசிங்க கேள்வி எழுப்பியிருந்தார் என்றும், இவ்வாறு பொலிஸ் அதிகாரி கேட்டமை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. (01)

# போதைப் பொருட்களுடன் மன்னாரில் நால்வர் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையால், போதைப் பொருள் வைத்திருந்த நால்வர் நேற்று முன்தினம் மன்னாரில் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் - உப்புக்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து 4.5 கிலோ கிராம் ஹெரோயின் போதைப பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை புத்தளத்தில் வைத்து 1490 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு இந்தியர்கள், மன்னார் கரிசல் பகுதியைச் சேர்ந்த ஒரு முஸ்லீமென மூவர் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே மற்றைய நால்வரும் நேற்றையதினம் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் மிகப் பெரியதொரு போதைப் பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக தென்னிந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கடத்தப்பட்டு மன்னாருக்குக் கொண்டு வரப்படும் போதைப் பொருட்கள் அங்கிருந்து கொழும்புக்கு கடத்தப் படுவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

# கௌரவமான சமாதானத்துக்காக தம்புள்ளவில் அமைதிப் பேரணி!

## ஞாயிறன்று நடைபெறவுள்ளது

இலங்கை உட்பட முழு உலகத்துக்கும் புனிதமான, உயர்ந்த, கௌரவமான சமாதானத்தைப் பெறும் பொருட்டு, மிக ஒற்றுமையாக, மிக அமைதியான பேரணி ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு - இலங்கை ரங்கிரி தம்புள்ள ராஜ மகா விகாரையில் இடம்பெறவுள்ளது என்று, வணக்கத்துக்குரிய அவுல குணவன்ச தேரரால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, சமாதானத்தை முன்னிட்டு அனைத்து சமயங்களின் கிரிகைகளில் பங்குகொண்டு, மனிதர்களைக் கொலை செய்யாது, மனிதர்களுக்குத் துன்பம் விளைவிக்காது, ஒரு சர்வமத ராஜ்யம் ஒன்றை நிறுவும் வரை, இந்த உயர்ந்த நோக்கத்துக்காகக் கடைசிவரை போராடுவோம் என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரம் யாழ்ப்பாணத்தில் உள்ள திணைக்களங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மதமாற்றத் தடைச் சட்டமூலத்தினை பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவோம்

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

மதமாற்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியுமென, ஜாதிக ஹெல உறுமய நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் மகரகமவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் ஒமல்பே சோபித தேரர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 150 சிங்கள பௌத்தர்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் நிச்சயமாக தமது கட்டாய மதமாற்ற எதிர்ப்பு பிரேரணைக்கு ஆதரவளிப்பர்.

பிரேரணை தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடைபெறுமானால் இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை நிச்சயப்படுத்துமாறு தாம் சிங்கள பௌத்தர்களிடம் கோரப்போவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகமும் தமது பிரேரணையை தோற்கடிப்பதில் முனைப்புக்காட்டுவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார். பெரும்பான்மையற்ற அரசாங்கமும் தமது ஆதரவு வாய்ப்பைத் தவறவிடாது என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01,தே)

# கொழும்பு நகர் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலையிலேயே!

## சிங்களப் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு நக்ரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாராவது கூறினாலும், தற்போது அந்த நகரம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதுடன், பயங்கரவாதச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளதென புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சிலர் சிங்கள நாளிதழான லக்பிமவிற்கு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கொழும்பு நகரம் பாதுகாப்பானதென உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், விடுதலைப் புலிகள் கொழும்பிற்கு வந்து படையினரின் புலனாய்வு அங்கத்தவர்களையும், தங்களுக்கு எதிரானவர்களையும் கொலை செய்யும் நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது.

அத்துடன், கொழும்பிலும் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகள் தமது எதிர்த்தரப்பு உறுப்பினர்களைக் கொலை செய்வதானது, அவற்றைத் தடுப்பதற்கு எந்தவித பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் இதுவரை செய்யப்படவில்லை என்பதையே காட்டுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (தே)

# வன்முறைச் சம்பவங்கள் விரைவில் கட்டுப்படுத்தப்படும்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை விரைவில் அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமென, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், ஆளும் கட்சியின் தலைவருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் களுத்துறையில் நடைபெற்ற சமுர்த்தி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் இன்று இரண்டு வகையான குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள், முரண்பாடுகள் காரணமாகத் திடீரென மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களென இரண்டு வகைகளில் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன.

இவற்றுள் ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெற்றுவரும் குற்றச் செயல்களே மிக அதிகளவில் இடம்பெற்று வருகிறது.

இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில், விசேட செயற்திட்டங்களும், நிதியொதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனடிப்படையில் அதிகளவிலான தேடுதல் நடவடிக்கைகள் உள்ளிட்ட விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் முடுக்கி விடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தன்னாட்சி அதிகாரசபையை வழங்க ஜனாதிபதி முயன்றால் அதை எதிர்ப்போம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கினால், அதை எதிர்த்துப் போராட மக்களைப் பெருமளவில் ஜே.வி.பி. திரட்டும் என்றும்,

உயிரைக் கொடுத்தும், அதற்கெதிராகப் போராடும் என்றும் ஜே.வி.பி. பிரச்சார செயலர் விமல் வீரவன்ச அறைகூவல் விடுத்துள்ளார்.

பிறிதொரு இடைக்கால நிர்வாக அலகை அரசு தயாரிப்பதாகக் கூறுவதை நிராகரித்த விமல் வீரவன்ச, தற்போதைய ஆளும் கட்சியின் பிரதான கூட்டணிக்கட்சி என்ற வகையில் தங்களுடன் கலந்தாலோசிக்காது அரசு எந்தவொரு திட்டத்தையும் வரைய முடியாது.

அத்தகைய முயற்சிகளை ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்துப் போராடக் களத்தில் இறங்கும்.

மகரகமவில் உள்ள இளைஞர் பேரவையில் கூடியிருந்த இளைய தலைமுறையினருக்கு விரிவுரை வழங்கப் பணித்த போதே விமல் வீரவன்ச இனத் துவேசத்தை இவ்வாறு அள்ளித் தெளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## உயர்தரப் பரீட்சை

# வினாத்தாள் கட்டமைப்பை மாற்றுவதற்கு ஆலோசனை

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை வினாத்தாளின் கட்டமைப்பை மாற்றம் செய்வதற்காகக் கல்வி அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாளின் கட்டமைப்பை இலகுவாக்குவதன் மூலம் மாணவரின் சுமையை குறைக்கும் முகமாகவே, இந்தக்குழு கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாக மேல் முறையீட்டு ஆணையாளர் எ.எம்.ஆர்.பி. அமரக்கோன் தெரிவித்தார்.


தற்போது காணப்படும் உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் சரியான பகுதிகளுக்குப் புள்ளி இடுதல், கட்டமைப்பு மற்றும் கட்டுரை என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

இந்தக் கட்டமைப்புக்கள் மாற்றம் செய்யப்படுவதுடன் இவற்றுக்கான மாதிரி வினாத்தாள் முன்கூட்டியே பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரட்டையர் ரெனிஸ்; இந்திய ஜோடி காலிறுதியில்



ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பதக்கம் பெற வாய்ப்புள்ள விளையாட்டுக்களில் ஒன்றாக கருதப்படுவது ரெனிஸ்.

இதன் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் முதல் நிலை வீரர்களான லியாண்டர் பெயஸ் - மகேஷ் பூபதி பங்கேற்றனர். இந்த ஜோடி தொடக்க சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த ரொடிக் ஜோடியைத் தோற்கடித்தது.

2 ஆவது சுற்றில் இந்த ஜோடி சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர் - அல்கிரோ ஜோடியை எதிர்கொண்டது.

முதல் செட்டை பெயஸ் - பூபதி ஜோடி 6-2 என்ற கணக்கில் வென்றது. 2. ஆவது செட் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இரண்டு ஜோடியும் மாறிமாறி புள்ளிகளை எடுத்தது. 6-6 என்ற சமநிலை ஏற்பட்டது. இதனால் டை - பிரேக்கர் கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் இந்திய ஜோடி 9-7 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. நேர்செட் கணக்கில் பெயஸ் - பூபதி ஜோடி வெற்றிபெற்றது. இந்த வெற்றிமூலம் பெயஸ் - பூபதி ஜோடி காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

# ஒலிம்பிக் ஹொக்கிப் போட்டி அவுஸ்ரேலியா-இந்தியா மோதல்

ஏதென்ஸ் ஒலிம்பிக் ஹொக்கிப் போட்டியில் இந்திய அணி 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது. அந்தப் பிரிவில் நடப்பு சம்பியனான ஹொலண்ட், அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, ஆர்ஜென்ரீனா, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் இடம்பெற்றன.

இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் ஹொலான்ட்டை 1-3 என்ற கோல் கணக்கில் வென்றது.

நேற்று முன்தினம் 2 ஆவது ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை எதிர்கொண்டது. இதில் இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

இந்தியா சார்பில் தன்ராஜ் பிள்ளை, பல்வித்சிங் தில்லான், திலீப திர்கெ, அகன் அஜித்சிங் ஆகியோர் கோல் அடித்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் பாகிஸ்தான் 7-0 என்ற கணக்கில் எகிப்தை தோற்கடித்தது.

ஆர்ஜென்ரீனா - அவுஸ்ரேலியா, கொரியா - இங்கிலாந்து இடையேயான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இந்திய அணி தனது 3 ஆவது லீக் ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவை இன்று எதிர்கொள்கின்றது. இதில் வெற்றிபெற முடியாவிட்டாலும் இந்தியா சமன் செய்தால் அரையிறுதி வாய்ப்பில் இருக்கமுடியும்.





இரட்டைக்குழல் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை சிம்பேனி றொட்.



4X200 மீற்றர் பிறீஸ்ரைல் தொடர் நீச்சலில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை ஒருவர்.



துடுப்பு வலித்தல் போட்டியில் தங்கம் வென்ற சுலோவாக்கிய வீராங்கனை எலினா கலின்கா.



சைக்கிளோட்டத்தில் தங்கம் வென்ற நெதர்லாந்து வீராங்கனை லியொன்ரின் சிஜ்லாட.



துடுப்பு வலித்தல் போட்டியில் தங்கம் வென்ற பிரான்ஸ் வீரர் ரொனி எஸ்ரான் கெட்.



25 மீற்றர் பிஸ்டல் சுடுதலில் தங்கம் வென்ற பல்கேரிய வீராங்கனை மரியா குறோஸ்டேவா.



100 மீற்றர் பிறேக் ஸ்ரோக் நீச்சலில் தங்கம் வென்ற சீன வீராங்கனை லூ சியோஜான்.



10 மீற்றர் பிளட்போம் இறுதிப் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனைகள் லாலூ லஷி - லிரில் ஆகியோரின் சாகசங்கள்.



பக்ஸ்ரோக் நீச்சலில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை நற்றலி கோலின்.



துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு முதலாவது பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த மேஜர் ராஜ்யவர்த்தன் சில் ராதிரா. இவர் இதில் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.



25 மீற்றர் பிஸ்டல் சுடும் போட்டியில் தங்கம் வென்ற பல்கேரிய வீராங்கனை மரியா குறோஸ்டோவா.




# தந்தையின் வழியில் தனயனுக்கும் தங்கம்!



ஒலிம்பிக்கில் ஒரு நாடு தங்கப் பதக்கம் பெற்றாலே பெருமை. பதக்கம் பெற்றதற்காக அவர் குடும்பத்தினரும் எவ்வளவு சந்தோஷம் அடைவார்கள். தவிர, ஒரே குடும்பத்தில் தந்தை பெற்ற தங்கத்தை மகனும் பெற்று வந்திருக்கிறார் என்றால் இனனும் கேட்கவா வேண்டும்.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. ஜப்பான் ஜிம்னாஸ்டிக் வீரர் நயோயா சுக்ககாரா தங்கம் பெற்றுள்ளார்.

1968, 1972 மற்றும் 1976 ஆகிய ஆண்டுகளில் அவர் தந்தை மிட்சுவோ ஜப்பான் அணி சார்பில் தங்கப் பதக்கங்களை அள்ளினார்.

தந்தையைப் போலவே மகன் நயோயாவும் அணி சார்பில் பதக்கத்தைப் பெற்றுள்ளார். 2 ஆம் உலகப் போருக்குப் பின்னர் ஒலிம்பிக்கில் தந்தையும் மகனும் பதக்கங்களைப் பெற்றது இல்லை.

இந்தப் பிரிவில் ஜப்பான் 1984 ஆம் ஆண்டுக்குப் பிறகு தங்கம் பெறவில்லை. அந்தக் குறையை நயோயா தீர்த்துள்ளார். 1960 கள் ஜப்பான் ஜிம்னாஸ்டிக் பொற்காலம் என்றே கூறவேண்டும். நயோயாவுக்கு 27 வயதாகிறது. கடந்த 11 ஆண்டுகளாக இவரது தந்தைதான் அவருக்குப் பயிற்சியளித்து வந்திருக்கிறார்.

# கிரிக்கெட் விளையாட முரளிக்கு 5 மாத தடை

(கொழும்பு)

சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அடுத்த ஐந்து மாதம் கிரிக்கெட் விளையாட முடியாது என அவுஸ்ரேலிய டொக்டர்கள் அவருக்குத் தடைவிதித்துள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் வீரரும், டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய (532) சாதனையாளருமான முத்தையா முரளிதரனின் வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்காக தற்போது அவுஸ்ரேலியா சென்றுள்ளார் முரளி. மெல்பேர்ன் நகரில் அவருக்கு சத்திரகிசிச்சை நடந்தது.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தாலும், குறைந்தது 5 மாதங்கள் அவர் கிரிக்கெட் பக்கமே வரக்கூடாது என்று அவுஸ்ரேலிய டொக்டர்கள் தடைவிதித்துள்ளனர்.

இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற அவரது சாதனையை அவுஸ்ரேலியாவின் ஷேன் வோர்ன் (527 விக்கெட்) [illegible]

இலங்கை அணி இந்த 5 மாத காலத்தில் பங்களாதேஷ், நியூஸிலாந்து அணிகளுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியகுளம் - புல்லுக்குளம் ஆகியவற்றை நவீன வசதிகளுடன் புனரமைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் மற்றும் புல்லுக்குளம் ஆகியவற்றை நவீன வசதிகளுடன் புனரமைப்பதற்கான நிதியை, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலர் குமார தாசன் யாழ்.மாநகரசபை ஆணையாளரிடம் கையளித்தார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, இந்த நிதி கையளிக்கப்பட்டது.

நொராட் திட்டத்தின் கீழ் இவ்விரு குளங்களையும் சுற்றி நவீன மயப்படுத்தப்பட்ட நடைபாதைகள் அமைக கப்படவுள்ளன.

அத்துடன், குடாநாட்டுக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் கண்டி வாவியில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்ற நவீன மின் ஒளியூட்டல் வசதிகளும் செய்யப் படவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (லெ)

# யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப்போட்டிகள் அடுத்த மாதம் 4ஆம், 6ஆம், 11ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 4 ஆம் திகதி நாடகப் போட்டியில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவினருக்கான உரையாடல் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியிலும், ஆரம்ப சிரேஷ்ட பிரிவினருக்கான கவிதை நாடகப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரியிலும், குழுப்பாடல் போட்டிகள் யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி தனி நபர்களுக்கான கவிதை, பேச்சுப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

பங்குபற்றும் சகல பாடசாலைகளையும் தயார் நிலையில் இருக்குமாறு யாழ்.மாவட்ட ஆங்கில தினப் போட்டிக் குழுவின் தலைவர் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார். (12)



தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கண்காட்சி நிகழ்வை வலயக் கல்விப் பணிப்பாளர் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும், அருகில் அதிபர், ஆசிரியர்களையும் காணலாம். (113)

## வருடாந்த உற்சவம

(வடமராட்சி)

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (17)

# வெண்புறா நிறுவனம் நடத்தும் கட்டுரை, சித்திரப் போட்டிகள்

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், கண்ணிவெடி தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரை எழுதுவோர் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கையில், ஈடுபடும் நிறுவனங்களின் சமூகத்துக்கான பங்களிப்பு, எமது சமூகத்தில் கண்ணி வெடி அபாயக்கல்வியின் முக்கியத்துவம், கண்ணிவெடிகளற்ற எதிர் காலத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு என்ற தலைப்புக்களில் ஏதாவது ஒரு தலைப்பில் 700-800 சொற்களுக்கு குறையாது எழுதப்பட வேண்டும்.

சித்திரம் வரைவோர் - கண்ணி வெடிகளில் இருந்து உம்மையும், எமது சமூகத்தையும் பாதுகாப்போம் எனும் கருப்பொருளை வெளிப்படுத்தும் வகையில் வரையப்பட வேண்டும்.

இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம். ஆக்கங்கள் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்பாக, வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், இல.63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.



வலி.கிழக்கு பிரதேசசபையின் அச்சுவேலி உப அலுவலகத்தினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கடந்த மாதம் 28 ஆம் திகதியன்று செல்வநாயகபுரம் தந்தை செல்வா சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற நடமாடும் ஆயுர்வேத வைத்தியசேவையில் வைத்தியர் நோயாளியை பார்வையிடுவதைக் காணலாம். (90)

# கிராமிய அமைப்புகளை விருத்தி செய்ய நிதியுதவி

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் உள்ள கிராம மட்டத்திலான அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை போரூட் மற்றும் யு.என்.எச்.சி.ஆர். ஆகியன இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், கிராம மட்டத்திலான சங்கங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நிதி உதவி உட்பட பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களில் சமூக மேம்படுத்தலை இலக்காகக் கொண்டே இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (17)





உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் நடாத்தப்படும் பாலர்பாடசாலை மாணவர்களின் ஆக்கக்கண்காட்சி அண்மையில் இடம்பெற்ற போது செஞ்சொற் செல்வர், ஆறு.திருமுருகன் ஆரம்ப உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (101)

# நிகொட் நிறுவனத்தினால் கடற்தொழிலாளர்களுக்கு உதவி

யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்தொழிலாளர்களின் நன்மை கருதி நிகொட் நிறுவனம் பல உதவிகளை செய்துவருகிறது.

இந்த வகையில் நிகொட் நிறுவனம் கடற்தொழிலாளர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரம், கண்ணாடிப் படகுகள், கட்டுமரங்கள் ஆகிய கடற்தொழில் திணைக்களத்தின் ஊடாக கடற்தொழில் சங்கங்கள் மூலம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அந்த வகையில் 20 கண்ணாடியிழைப் படகுகள் 23 கட்டுமரங்களும், 20 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட கடற்தொழிலாளர்களது தொழில் மேம்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டே இந்த கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (17)

# கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுச் செயலாளர் ஆர்.தியாகலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக, நிகொட் நிறுவன செயற் திட்ட பணிப்பாளர் ரி.லங்காநேசன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் புதிய வகுப்பறை, மாடிக் கட்டடத்தை த.லங்காநேசனும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்தை இ.தியாகலிங்கமும், கட்புல-செவிப்புல அறையை நடேசு பாஸ்கரனும். மீள்புனரமைக்கப்பட்ட மாணவர் விடுதிகளை வீ.இராசையா, ஜி.சிவகாலனும், கிரிக்கெட் ஆடுகளத்தை மு.இராஜகோபாலும் திறந்து வைக்கவுள்ளனர். (12)



நவாலி வடக்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டு விழாவில் கௌரவ. விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் பிரதேசசபை தலைமையக உள்ளூராட்சி உதவியாளர் [illegible] ராஜா ரமேஷ் சிறப்புரையாற்றுவதையும், அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (100)

**ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல்**

# மனித உரிமைகள் ஆணைகுழுவில் நேற்று முன்தினம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

ஐ.பி.சியின் யாழ்ப்பாணச் செய்தியாளர் வே.தவச்செல்வத்துக்கு பலாலி படைத்தளத்தில் கொலை அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பான விசாரணை ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.

இந்த விசாரணையில் யாழ். மாவட்ட இராணுவத்தளபதியான சுசில் சந்திரபால சார்பில் பலாலி படைத்தளத்தைச் சேர்ந்த கேணல் விஜய வர்த்தன சமூகமளித்தார்.

இந்த விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளதாகவும், சரியான தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லையெனவும் யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விரைவில் இந்த விசாரணை கொழும்பு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைமையகத்துக்கு மாற்றப்படலாம் என. எதிர்பார்க்கப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ப)


**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**இரண்டாவது அகவையில்**



பெயர் : அ.பானுஜா
முகவரி : "இரத்தின இல்லம்" சித்தன்கேணி

**நான்காவது அகவையில்**



பெயர் : செ.சிந்துஜன்
முகவரி : "சிந்துமஹால்" மாவிசந்தி.

**வாழ்க வளமுடன்**



சிறாரின் பெயர் :-----------------
முகவரி :-----------------
பிறந்த ஆண்டு:-----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------
பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தொழில் மலர்

# பீர்க்கங்காய் உணவுக்கு மட்டுமல்ல பல்வேறு தேவைகளுக்கும் பயன்படும்

பீர்க்கங்காய் முதன் முதலாக இந்தியா வில் உற்பத்தி செய்யப்பட்டது. இன்று இந்த மரக்கறி உலகின் பல நாடுகளில் பிரபலம் பெற்று விளங்குகிறது. பீர்க்கங்காய் மரக் கறியாக உணவுக்கு மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. பல்வேறு தேவை களுக்கும் உபயோகிக்கப்படுகிறது. முக்கிய மாக மேலைநாடுகளில் இந்தப் பீர்க்கங் காயைக் காயவைத்து அதனைத் தும்பாக்கி, சமையல் பாத்திரங்கள் கழுவுவதற்குரிய வகையில் ஸ்பொன்ச் ஆக மாற்றிப் பயன் படுத்திக் கொள்கின்றனர். இதனால், பீர்க் கங்காயை Wash Sponge என அறிமுகப் படுத்துகிறார்கள். மேலும் வெவ்வேறு வித மான அலங்காரப் பொருட்கள் பீர்க்கங்காய்த் தும்பு, தலையணை, ரிபன்களும் இந்தப் பீர்க்கங்காயைக் கொண்டு தயாரிக்கப்படு கிறது. கொரியா, சனா, கொலம்பியா போன்ற நாடுகள் மேற்குறிப்பிட்ட தயாரிப்புகளுக்கு அதிகமாக இதனை உபயோகிக்கின்றன.

விவசாயிகள் மட்டுமல்ல, வீடுகளில்கூட பீர்க்கங்காயை உற்பத்தி செய்யமுடியும். ஒரு போசாக்கு நிறைந்த மரக்கறி ஆகும். இதிலுள்ள தும்புத் தன்மை, உணவை உட னடியாக செரிமனமாக்கும் இயல்பைக் கொண் டது. அத்துடன், இதனுடைய தண்டில் இருக் கும் சாற்றை மருந்துகள் செய்வதற்குப் பயன் படுத்துகிறார்கள்.

பீர்க்கங்காய் இரு வகையாகக் காணப் படுகிறது. விளிம்புள்ள பீர்க்கங்காய். விளிம் பில்லாத பீர்க்கங்காய் என இருவகைப்படும்.

பீர்க்கங்காய் கசப்புத் தன்மை கொண் டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இதனால், இந்தப் பயிர் முற்றமுன்னர் பிடுங் கிக் கொள்ளவேண்டும். முற்றிய பீர்க்கங்காய் கசப்புத்தன்மை கொண்டதாக இருக்கும். இவை உணவுக்கு உகந்ததல்ல.

அத்துடன், தொடர்ந்தும் இந்தப் பயிரை ஒரே இடத்தில் பயிரிடாமல், இடைவெளி விட்டு, பயிரிட்டுப் பயனை அடைவது சிறந்த தாகும். மேலும் வெவ்வேறு காலநிலைக்குப் பீர்க்கங்காய் கசப்புத் தன்மையாக மாறும்.

எனவே, பீர்க்கங்காய் பயிரிடும்போது, மேற்கூறப்பட்ட விடயங்கள் தெரிந் திருக்கவேண்டும். அப்போதுதான் அத னுடைய விளைச்சல் மூலம் பயன டைய முடியும்.

பீர்க்கங்காய் வரண்ட காலநிலையில் வளரும் மரக்கறி ஆகும். விளிம்புள்ள பீர்க்கங்காய் கடல் மட்டத்திலிருந்து 500 மீற்றரும், விளிம்புகள் இல்லாத பீர்க்கங்காய் 1000 மீற்றர் உயரமான பிரதேசங்களிலும பயிரிடக்கூடியன. மலைப்பிரதேசம் இந்த மரக்கறிக்கு உகந்தது அல்ல. அத்துடன், நீர் வழிந் தோடக்கூடிய காபனிக் அடங்கிய மணல் கலந்த மண் இதற்கு மிகச் சிறப்பான தாகும். மண்ணில் Ph அளவு 5.5 - 7.5 உகந்ததாகும்.

பிரதானமாக உலர் வலயத் தில் பெரும்போகத்தில் உற் பத்தி செய்யப்படுகிறது. சிறு போகத்தில் நீர் விநியோகம் செய் வதன் மூலம் சிறப்பாக உற்பத்தி செய்யலாம்.

### நிலம் தயாரித்தல்

முதலில் நிலத்தைப் புரட்டி, மண்கட்டி களை உடைத்துக் கொள்ளவேண்டும். பின் னர், 30 சென்ரிமீற்றர் x 30 சென்ரிமீற்றர் x 30 சென்ரிமீற்றர் அளவில் கிடங்குகளை 1.5 x 1.5 மீற்றர் இடைவெளிவிட்டு வெட்டிக் கொள்ள வேண்டும். தேவையற்ற விதத்தில் நீர்தங்கி இருப்பதைத் தடுப்பதற்குரிய விதத் தில், ஆழமான வாய்க்கால்களை அமைத்துக் கொள்ளவேண்டும். நன்றாக ஒரு கூடை காப னிக் உரம் எடுத்து, மண்ணுடன் கலந்து கொள்ளவும். விதைகளை முளைக்க வைப் பதற்கு 2 - 3 நாட்களுக்கு முன் இந்த உரத்தைக் கிடங்குகளுக்குள் போட்டு, மண் ணுடன் கலந்துகொள்ளவேண்டும்.

ஒன்றுக் கொன்று சற்றுத் தூரத்தில் 3 - 4 விதைகளை, 2-3 சென்ரிமீற்றர் ஆழத்தில் விதைக்கவேண்டும். பின்னர் நீர் ஊற்ற வேண் டும்.

விதைகள் முளைத்து இரண்டு வாரங்கள் சென்ற பின்னர், ஒரு இடத்தில் இரண்டு கன்று களை மட்டும் விட்டு விட்டு அதிகமான கன்றுகளைப் பிடுங்கி விடவேண்டும். அதன் பின்னர் கன்றுகள் நன்றாக முளைக்கும். 2 மீற்றர் உயரமான பந்தல் ஒன்றை அமைத்துக் கொடிகளை விட்டுவிட வேண்டும். இதற்காக, 3 மீற்றர் இடைவெளிக்கு ஒரு தூண் போன்று அமைத்து, அதனைச் சுற்றி கயிறு அல்லது கம்பிகளைப் பயன்படுத்திப் பந்தல் அமைத் துக் கொள்ளலாம்.

வீடுகளில் உற்பத்தி மேற்கொள்ளும் போது, வேலிகளில் கொடிகளைப் பரப்பி விடலாம்.

### களைகளை நீக்குதல்

பீர்க்கங்காய் விதைகள் முளைத்தவுடன் வரிசைகளுக்கு இடையிலுள்ள களைகளைக் கையால் பிடுங்கி விடவேண்டும்.

பீர்க்கங்காய் ஆழம் குறைந்த வேர்களைக் கொண்ட பயிர். எனவே, வேர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு களைகளை நீக்குவது முக்கி யமாகும்.

### பீர்க்கங்காய்க் கொடியைத் தாக்கும் நோய்கள்

இலையான்களின் பாதிப்பு, எபிலெக்னா, ஒளெலக் கபோரா என்ற கிருமிகளின் பாதிப்பு, மரத்தின் அடி அழுகுதல், பூஞ்சணம் பிடிக்கும் நோய்கள் பீர்க்கங்காய்ச் கொடியைத்தாக் கும்.



இலையான்களின் பாதிப்பைத் தடுப்ப தற்கு, பீர்க்கங்காய் பிஞ்சுகளாக இருக் கும் பொழுதே பொலித்தீன் உறை களால் பீர்க்கங்காய்ப் பிஞ்சு களை மறைத்துவிடலாம். பெந்தியோன் 25 கிராம் சீனியுடன் கலந்தும் போடலாம்.

எபிலெக்னா, ஒளெலக்க போரா போன்ற கிருமிகளின் பாதிப்புக்கு காபரின் 85 வீதமாகப் (ஈரத்தூள்) பாவிக்கவேண்டும்.

மண்ணில் நீர் அதிககாலம் தேங்கி இருப்பதால், ஏற்படும் மரத்தின் அடி அழுகும் நோய்க்கு - கெப்டான் 80 வீதம் (ஈரத்தூள்) 50 கிராமை, 10 லீற்றர் நீரில் கலந்து தெளிககவும்.

உஷ்ணமான வரண்ட கால நிலையே பூஞ்சணம் பிடிக்கும் நோய்க் குக் காரணமாகும். இதற்கு சல்பர் 80 வீதம் (ஈரத்தூள்) 50 கிராமை 10 லீற்றர் நீரில் கலந்து தெளிக்கவும்.

### விளைச்சலைப் பெறல்

காய்கள் முற்றுவதற்கு முன்னரே பீர்க் கங்காய்களை 60 -70 நாட்களுக்குள் பிடுங்கி விடவேண்டும். அதன் பின்னர் 4 நாட்களுக்கு ஒரு தடவையாக 1 1/2 - 2 மாத காலத்துக்கு 10 - 15 தடவை விளைச் சலைப் பெற்றுக் கொள்ளலாம்.

பிடுங்கிய காய்களை அதிக சூரிய ஒளி படாமல் வைத்துக்கொள்ளவேண்டும். அதே நேரம் காய்களுக்கு காற்று நன்றாகப்படுமாறு கூடைகளில் களஞ்சியப்படுத்த வேண்டும்.

**- சசி சந்திரகாசன் -**

### இரசாயண உர பாவிப்பு

| போடவேண்டிய காலம் | யூரியா கிலோ கிராம் ஹெக்ரெயர் | 3 சுப்பர் பொஸ்பேட் கிலோ கிராம் ஹெக்ரெயர் | மியுரியெட் ஒப்பொட்டேஸ் கிலோ கிராம் ஹெக்ரெயர் |
|---|---|---|---|
| பிரதான உரம் | 75 | 200 | 60 |
| கன்றுகள் முளைத்து 4 வாரங்களில் | 75 | - | 60 |
| கன்றுகள் முளைத்து 8 வாரங்களில் | 75 | - | 60 |

### 100 கிராம் பீர்க்கங்காயில் அடங்கியுள்ள போசாக்குகள்

நீர் 95.2 கிராம், சத்து 17 கிலோ கலரி, புரதம் 0.5 கிராம், எண்ணெய்சத்து 0.1 கிராம், காபோவைதரேற்று 3.4 கிராம், கல்சியம் 18 மில்லிகிராம், பொஸ்பரஸ் 26 மில்லிகிராம், இரும்புச் சத்து 0.5 மில்லிகிராம், கரோடீன் மைக்ரோ 33 கிராம், றைபோபி லேவின் மைக்ரோ 10 கிராம், நியசீன் 0.2 மில்லிகிராம், விட்டமின் சி 5 மில்லிகிராம்.

## மருத்துவ குணம் நிறைந்தது நீர்த்துப் பூசணி

உலர்வலயப் பிரதேசங்களில், வரண்ட காலநிலைக்கு மிகச் சிறப்பாக உற்பத்தி செய் யக் கூடிய மரக்கறியாக நீர்த்துப் பூசணிக்காய் விளங்குகிறது. விவசாயத் தோட்டங்களில் அதிகமாக இந்த நீர்த்துப் பூசணிக்காய் உற் பத்தி செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். எரித்து ஒழுங்கு செய்யப்பட்ட ஈரத்தன்மை யான புதிய மண்ணில், நன்றாகக் காய வைத்து எடுக்கப்பட்ட விதைகளை விதைக் கும்போது, அந்தச் செடி சிறப்பாக வளர்ச்சி அடையும்.



கிளைகள் பரந்து நிற்கும் மரங்களிலோ அல் லது தடியால் செய்யப்பட்ட பந்தல் கொடி யைச் சுற்றி விடலாம். நன் றாக வளர்ச்சி அடைந்த கொடி ஒன்றிலிருந்து 5 -10 காய்கள் பெற்றுக் கொள் ளலாம். காய் களை வைக் கோலினால் சுற்றி வைப்பதன் மூலம் கிரு மிநாசினிப் பாவனையைத் தடுத்துக் கொள் ளலாம்.

மரக்கறியாக உணவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், இதில் மருத்துவத் தன்மை அதிகம் உண்டு. பலதரப்பட்ட நோய்களுக்கும் நிவாரணியாக விளங்கு கிறது.

நீர்த்துப் பூசணியின் ஒரு விசேட குணம், விஷத்தை முறிப்பதாகும். இதன் முற்றிய காய்களின் சுவை, பிஞ்சுக் காய்களை விட அதிகமாகும்.

நீர்த்துப் பூசணியைக் களஞ்சியப்படுத் தும் பொழுது அவதானமாக இருக்கவேண் டும். சிறிய கீறல் ஏற்பட்டாலும் காய்க்குப் பாதிப்பு ஏற்பட்டு அழுகிவிடும். இதற்கு எப்போதும் சந்தை வாய்ப்பு உண்டு.

## குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 30/= | 30/= | 20/= | 25/= | 20/= | 20/= | 20/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 10/= | 15/= | 15/= | 20/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 60/= | 60/= | 80/= | 80/= | 80/= | 80/ | 75/= |
| கத்தரிக்காய் | 35/= | 25/= | 40/= | 30/= | 55/= | 35/= | 40/= | 30/= |
| பாகற்காய் | 30/= | 30/= | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= |
| கரட் | 70/= | 60/= | 60/= | 60/= | 80/= | 80/= | 80/= | 60/= |
| பீற்றூட் | 20/= | 30/= | 30/= | 20/= | 25/= | 30/= | 20/= | 40/= |
| முருங்கைக்காய் | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 10/= | 40/= | 20/= |
| வெங்காயம் | 30/= | 25/= | 30/= | 30/= | 30/= | 30/= | 35/= | 35/= |
| பச்சை மிளகாய் | 50/= | 50/= | 60/= | 40/= | 30/= | 60/= | 40/= | 40/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகளின் வாழ்வில் ஒளியூட்டும் திட்டம் - "சரசவி சவிய"

இலங்கைப் பட்டதாரிகளை குறிப்பாக, தனியார் துறையில் வேலைக்கமர்த்தும் வகையில் உலக வங்கியின் நிதி உதவியோடு இலங்கை அரசாங்கம் - தனியார் துறையுடன் இணைந்து 'சரசவி சவிய'. நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் எந்தவிதமான செல்வாக்குப் பிரயோகங்களையும், பிரயோகிப்பதைத் தடுக்கும் முகமாக கணினி அடிப்படையில் எழுந்தமான முறையிலேயே நேர்முகப் பரீட்சைக்கான தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

இதன் அடிப்படையில் சுமார் 27 ஆயிரம் பட்டதாரிகளை உள்வாங்க அரசு திட்டமிட்டுள்ளபோதும், இது சாத்தியமாகுமா என்பது ஒருபுறமிருக்க, இதன் நடைமுறைகளை அறிந்து கொள்வதே விண்ணப்பிக்கும் பட்டதாரிகளுக்கு பேருதவியாக அமையும்.

இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படும் பட்டதாரிகளுக்கு அரசு 4000 ரூபாவும், இவர்களை வேலைக்கமர்த்தும் நிறுவனம் குறைந்தது 2000 ரூபாவும் வழங்குதல் வேண்டும். இந்த வகையில் 'முகாமைத்துவ பயிலுநர்களாக தேர்வு செய்யப்படும் பட்டதாரிகள் ஆகக்குறைந்த வேதனமாக 6000 ரூபாவைப் பெறமுடியும்.

இவர்கள் இவ்வாறு ஒரு வருடகாலம் முகாமைத்துவ பயிலுநராகக் கடமையாற்ற முடியும். இதன் பயிற்சிக்கால முடிவில், குறிப்பிட்ட நிறுவனம் இவர்களது திறமையில் நம்பிக்கை கொண்டால், தொடர்ந்து நிரந்தர ஊழியராக நியமிக்க முடியும்.

இவ்வாறு இவர்கள் ஒரு வருடகாலத்துக்கு முகாமைத்துவ பயிலுநர்களாக கடமையாற்றுகின்ற போது இவர்கள் மேற்படிப்பையோ அல்லது தகவல் தொழில் நுட்பம்சார் கற்கைநெறியையோ மேற்கொண்டால், அதற்கான நிதியுதவி சுமார் 40 ஆயிரம்வரை வழங்கப்படும். இது ஒரு நன்கொடையாகும்.

இந்தத் திட்டத்தில் பதிவு செய்யும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் முதலில் ஆங்கில அறிவை மேம்படுத்தும் வகையில், பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும். இது சுமார் ஆறு வாரங்களிலிருந்து ஆறு மாதங்கள் வரை இடம்பெறலாம். இத்தகைய ஆங்கில அறிமுகப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்களையே, தனியார் நிறுவனங்கள் வேலைக்கமர்த்தும் என்பது உறுதியானதாகும்.

இந்தத் திட்டமானது சுயநம்பிக்கை உள்ள, திறமைகளை வெளிக்காட்ட எண்ணுகின்ற பட்டதாரிகளுக்குப் பேருதவியாக அமையும் எனலாம். கடந்த காலங்களில் அரச வேலைகளில் ஆண்டு அடிப்படையில் பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்டபோது, பல பட்டதாரிகள் ஒரு வேலையிலிருந்து இன்னோர் வேலைக்கு தம்மை மாற்றிக் கொள்வதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். இதனைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கண்டும் காணாததுபோல் செயற்பட்டமையால், உண்மையில் வேலையற்றிருந்த பல பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பம் இல்லாது போனமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், இங்கு ஆண்டு அடிப்படையில்



அல்லாது திறமை மற்றும் எழுந்தமானமான தெரிவு என்பன பின்பற்றப்படுவதால், இத்தகைய நிலை தவிர்க்கப்படுவதோடு ஒரு வருட பயிற்சிக் காலமாகவும், திறமைகளை நிரூபிக்கும் காலமாகவும் கருதுவதால் இங்கு ஒரு தொழிலிலிருந்து இன்னொரு தொழிலுக்குப் போகும் பட்டதரிகளுக்கு இடமில்லை எனலாம்.

பட்டதாரிகளே! உண்மையில் நீங்கள் வேலையற்று இருக்கிறீர்களா? அப்படியானால் பதிவு செய்யுங்கள். கடந்த காலங்களைப் போன்று இன்னொருவருக்குக் கிடைக்கும் எதிர்காலத்தை பாழடிக்காதீர்கள். பட்டம் பயிலும்போது பயன்படுத்திய மூளையை இங்கேயும் பயன்படுத்தி விவேகமாக சிந்தியுங்கள்.

நீங்கள் உங்களை அநுராதபுரம், பதுளை, கண்டி, குருநாகல், மாத்தறை, இரத்தினபுரி, திருகோணமலை, யாழ்ப்பாணம், போன்ற பிராந்திய அலுவலகங்கள் ஏதாவது ஒன்றில் பதிவுசெய்துகொள்ளலாம். யாழ்ப்பாண அலுவலகம் - பருத்தித்துறை வீதியில் முத்திரைச் சந்திக்கு அண்மையிலுள்ள வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் இயங்குகின்றது. மேலதிக விபரங்களைப் பெற ஆவலாக இருப்பின், WWW.Sarasavisaviya.org என்ற இணையத் தளத்தைப் பார்வையிடவும்.

**வரணியூர் - எஸ்.ஜெயா**

# மேலாளரின் அவசியமற்ற குறுக்கீடு பணியாளரின் வேலையைப் பாதிக்கும்




ஒரு நிறுவனமொன்றின் மேலாளர் நிறுவனத்துக்கு மிகவும் முக்கியமானவர். அவரின் செயற்பாடுகள் நிறுவனத்தை நல்லதொரு நிலைக்குக் கொண்டு செல்கிறது. தனக்குக் கீழே வேலைபார்க்கும் ஊழியர்களின் நன்மதிப்பைப் பெற வேண்டியவராகவும் மேலாளர் விளங்குகிறார்.

ஒரு நிறுவனத்தின் மேலாளர் தனக்குக் கீழே வேலைசெய்யும் பணிப்பாளர்களின் பணியைக் குழப்புகின்ற வகையில், குறுக்கீடுகளைச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியது முதற்கடமையாக அமைகின்றது. இந்த முதற்கடமையை ஒரு மேலாளர் புரிகின்றபோது, பணியாளரின் வேலை, நேரம் மீதப்படுத்தப்படுகின்றது.

குறுக்கீடுகள் என்று கூறும்போது, அவசியமற்ற குறுக்கீடுகளையே இங்கு குறிப்பிடப்படுகின்றது. மேலாளர் அவசியமாகக் குறுக்கீடு செய்ய வேண்டிய கருமங்களும் இருக்கவே செய்கின்றன. அவ்வாறான குறுக்கீடுகளை மட்டுமே மேலாளர் நிறைவேற்ற வேண்டும். குறுக்கீடு செய்வதற்கு மேலாளருக்கு உரிமை இருக்கின்றது என்ற ஒரேயொரு காரணத்தால், முக்கியமான பணிகளில் ஈடுபட்டிருக்கும் பணியாளரை இடைநிறுத்தி, அவரது பணிகளில் குறுக்கீடு செய்வது நன்மையான விடயமாகாது.

மேலாளர் நிறுவனம் சம்பந்தப்பட்ட முக்கியமான விடயங்களைப் பணியாளர்களுடன் ஒருமித்துக் கூடிக்கதைத்து முடிவெடுக்க வேண்டியவர்களாகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் கூட்டங்களைக் கூட்டி, கூட்டங்கள் மூலமாக முக்கிய தீர்மானங்களை எடுக்க வேண்டிய பொறுப்புப் பணியாளர்களின் - நிறுவன முன்னேற்றத்துக்கு நன்மை பயக்கும் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில் கூட்டப்படுகின்ற கூட்டங்கள் பயனுள்ளவையாக இருக்கும். தேவையற்ற விடயங்களுக்குக் கூட்டங்களைக் கூட்டி நேரத்தை வீணடிப்பது மேலாளரின் பொறுப்பற்ற செயலாகவே அமையும்.

மிக அவசரமான, அவசியமான, தேவையான நேரங்களில் மட்டுமே மேலாளர் ஒருவர் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

மேலாளர் என்ற பதவியில் அமர்ந்தவுடன் சிறுசிறு வேலைகளுக்கும் இன்னொருவரை ஏவுகின்ற குணம் சிலரிடையே இயல்பாகவே வந்துவிடுகிறது. தம்மால் செய்து கொள்ளக் கூடிய சுலபமான வேலைகளுக்குக்கூட ஏனைய பணியாளர்களை ஏவி விடுகின்ற தன்மையை மேலாளர்களிடையே காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான நிலையில் பணியாளர்களின் நேரம் வீணடிக்கப்படுகின்றது. பணியாளர்களும் தமது பணியைச் செவ்வனே செய்து முடிக்க முடியாமல் போகிறது.

மேலாளர் ஒருவர் நடந்துகொள்ளும் முறையைப் பின்பற்றியே ஏனையோரும் நடப்பர். எனவே, மேலாளருக்கு அடுத்த நிலையில் இருக்கும் பணியாளர் தனக்குக் கீழேயுள்ள பணியாளர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை [illegible] கொள்வதற்கு ஒரு மேலாளரின் முன்உதாரணமாகச் செயற்படவேண்டும்.

தவறுவிடும் மேலாளரையே பின்பற்றும் ஊழியரைக் காட்டிலும், மேலாளர் விடுகின்ற சிறு தவறுகளை அவருக்குச் சுட்டிக்காட்டி, அவற்றை மேலாளர் போக்கிக் கொள்வதற்குரிய நடவடிக்கையைச் செய்யும் பணியாளரே ஒரு நிறுவனத்தின் உயர்வுக்கு உண்மையாக உழைப்பவனாகின்றான்.

சில பணியாளர்கள் தமது திறமையான பேச்சின் மூலமாக மேலாளரின் கண்டிப்புக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்வதையும் நிறுவனங்களிடையே காணக்கூடியதாகவுள்ளது. இந்தநிலை தவிர்க்கப்படவேண்டும். அனைத்து ஊழியர்களும் சமமாக நடத்தப்படவேண்டும். பாரபட்சம் ஊழியரிடையே காட்டப்படலாகாது. அதுவே நிறுவன வளர்ச்சிக்கு வித்திடும்.

**பூ.நகுலன்**

# தொழில் வங்கி

| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| யு.என்.டி.பி. (U.N.D.P) | 01. திட்ட அலுவலர்கள் (மன்னார், அம்பாறை) | பொருளியல், சமூக விஞ்ஞானம், திட்டமிடல் சார்ந்த ஏதாவதொரு துறையில் பட்டதாரி. கணினி அறிவு. | 25.08.2004 |
| | 02. நிர்வாக, நிதி உதவியாளர். (மன்னார்) | நிதி, கணக்கியல் சார்ந்த துறையில் பட்டதாரி. 3 வருட அனுபவம் கணினி அறிவு. | |
| | 03. தேசிய திட்டமிடல் அலுவலர். (கொழும்பு) | துறைசார் பட்டதாரி 3 - 5 வருட அனுபவம். கணினி அறிவு. | |
| | 04. பொதுத் தகவல் தொடர்பாடல் அலுவலர் (கொழும்பு) | தகவல் தொடர்பாடல் சார்ந்த துறையில் பட்டதாரி. 3 - 5 வருட துறைசார் அனுபவம். | |
| | 05. றிப்போட்டிங் அலுவலர். (கொழும்பு) | சர்வதேச அபிவிருத்தித் திட்டமிடல், அரசியல், பொருளியல் விவகாரம், சர்வதேச தொடர்பாடல், தொடர்பாடல் சார்ந்த ஏதாவதொரு துறையில் பட்டதாரி. 3-5 வருட அனுபவம். | |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர பரீட்சை மீள்பரிசீலனைக்கு
## 23 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை பரீட்சைத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுவது பற்றிய அறிவித்தல் அடுத்தவாரம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.விஜயசிறி தெரிவித்தார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அதிபர்களின் ஊடாக அனுப்பி வைக்கவேண்டும்.

இதேவேளை, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இந்த முறை சித்தியடைந்துள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிகள் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், அத்துடன் இந்த முறை பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களின் தொகையை அதிகரிக்கவுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## கல்வியங்காடு - புதிய செங்குந்தா வீதி பல வருடங்களாக திருத்தப்படவில்லை

கல்வியங்காடு புதிய செங்குந்தா வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையால், மக்கள் போக்குவரத்தின்போது பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்தனர்.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக எந்தவித திருத்த வேலைகளும் மேற்கொள்ளாமல் புறக்கணிக்கப்பட்டது போல் உள்ளது. வீதியைத் திருத்துவதற்காக ஆறு மாதங்களுக்கு முன்னர் பறிக்கப்பட்ட கற்குவியல் அப்படியே வீதியோரமாக இன்னமும உள்ளது.

இதனாலும், மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. இந்த வீதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகம் உள்ள தால நடந்து பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகள், சந்தைக்குச் செல்லும் மக்கள் நாய்களால் துரத் தப்படும் வேளைகளில், கற்குவியலூடாக மோதுப்பட வேண்டிய நிலையுள்ளது.

இந்த வீதி செப்பனிடப்பட வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப் பட்ட தரப்பினர் புரிந்து கொண்டு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (63)

## மானிப்பாய் பிரதேச சபையில் உள்ளூராட்சி வார நிகழ்வு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாளை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி வாரப் பெரு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் பிரதேச சபையின் செயலாளர் பி.விகடர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக - யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் ப.சச்சிதானந்தம், மானிப்பாய் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மா.செல்வராஜா மற்றும் பல பிரமுகர்கள், பொதுமக்கள் பங்குபற்றவுள்ளனர்.

இறுதியில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி மானிப்பாய் பிரதேசசபையால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும், கேடயங்களும் வழங்கப்படுமென மானிப்பாய் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (100)

### காண்பியல் நிகழ்வு

'நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம்' எனும் மகுடத்தின் கீழ் கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் கீழ் இயங்கும் திரைப்பட வட்டத்தினால், நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில், தமிழீழ திரைப்பட இயக்குநர் ஞானரதனின் இயக்கத்தில் உருவான 'புயல் புகுந்த பூக்கள்' தென்னிந்தியத் திரைப்பட நடிகை ரேவதியின் இயக்கத்தில் உருவான 'மித்ரமைப்ரெண்ட்' ஆகிய திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

திரைப்படங்களின் முடிவில் நிகழும் விமர்சனக் கலந்துரையாடலில் இயக்குநர் ஞானரதன் பங்கேற்கவுள்ளார். கலந்துரையாடலை எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் வழிநடத்தவுள்ளார்.

## மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

யா/வட.இந்து மகளிர் கல்லூரியின் வைரவிழாவையொட்டி மலர் வெளியீடும், பரிசளிப்பு விழாவும், சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரியின் அதிபர் செல்வி. அ.கனகரத்தினம் தலைமையில நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கமும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினமும், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (12)

## புள்ளிவிபர திரட்டில் பதியக் கோரிக்கை

தேசிய புள்ளிவிபரப் பதிவேட்டில் உள்ளூராட்சி வாரச் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை இணைத்துக் கொள்ளுமாறு மானிப்பாய் பிரதேச சபையினர், புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தைக் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்துடன் மானிப்பாய பிரதேச சபையின் புள்ளி விபரத் திரட்டையும் அனுப்பி வைத்துள்ளதாக பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

## வவுனியாவில் தேங்கி கிடந்த தபால்பொதிகள் வந்தன

வவுனியாவில் நீண்ட காலமாக தேங்கியிருந்த தபால் பொதிகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாக போக்குவரத்துச் சிக்கல் காரணமாக இந்தத் தபால் பொதிகள் வவுனியா தபால் நிலையத்தில் தேங்கிக் கிடந்தன.

இவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு தபால் திணைக்களத்தினர் பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், போக்குவரத்துச் சிக்கலைக் காரணம் காட்டி இது இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இப்போது தபால் திணைக்களம் மேற்கொண்ட கடும் முயற்சி காரணமாக வெளிநாட்டுத் தபால் பொதிகள் உட்பட பல பொதிகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## 15ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக பொதுநூல் நிலையத்துக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு தேவைப்படும் தகவல் தொழில்நுட்பம், கணினி ஆகிய துறைசார் நூல்கள் உட்பட மற்றும் பல நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தப் பகுதியிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்கள் நூலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த நூல்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும் நூல் நிலையப் பொறுப்பாளரான நூலகர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நூலகத்தில் வாசகர்களுக்கு தேவைப்படும் வாங்குகள், கதிரைகள், மேசைகளுக்கு பலத்த பற்றாக்குறை நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்குப் பிரதேசசபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

## உடுவில் கோட்ட அதிபர்களுக்கான கருத்தமர்வு இராமநாதன் கல்லூரியில்

உடுவில் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமும், சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வும் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் இந்த முறை சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் முகமாக மேலதிக வகுப்புக்களை குடும்பப் பாடசாலைகள் மூலமாக நடாத்துவதற்கான இடத் தெரிவு இடம்பெறுவதுடன் மேலும் பல விடயங்கள் பரிசீலிக்கப்படவுள்ளது.

ஆசிரியர் தரவட்டம் என்ற கருத்தரங்கில் 10, 11 தரங்களில் கல்வி கற்கும் சமூகக் கல்வி ஆசிரியர்கள் அனைவருக்குமான வலுவூட்டல் பயிற்சி வகுப்புக்கள் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (91)

## பிரதேச செயலகத்துக்கு புதிய கட்டடம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குப் புதிய மாடிக்கட்டடம் அமைக்கும் வேலைகள் பருத்தித்துறையில் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. இதற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டு, கட்டம் கட்டமாகக் கொடுக்கப்படுகின்ற நிதியில் இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன எனப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேச செயலகம் இப்போது தனியார் கட்டடத்தில் இட நெருக்கடியுடன் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான செயன்முறைப் பரீட்சைக்கான திகதியைப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 5ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெற்ற சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைக்கான திகதி ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாதோரும் தமக்கான மீள் எழுத்துப் பரீட்சைக்கான திகதியை அன்றையதினம் காலை 9மணிக்கு மீள் பரீட்சைக்கான திகதியைப் பெற்றுக்கொள்ளலாம் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (சீ)

## பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலமாகும் அபாயம்

மண்டைதீவு கிழக்கு கடல் நீர் உட்புகாமல் போடப்பட்ட தடுப்பு அணைகள் பல வருடகாலமாக சீர் செய்யாதபடியால் மழைகாலங்களில் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அந்த ஊர் பயிர்ச் செய்கையாளர்கள் பெரும் கவலை தெரிவித்தனர். இப்போதும்கூட கிணற்று நீர் உவர் நீராக மாறியுள்ளதாகத் தெரிவிக்கும் அதே நேரம் இந்த முறை மழைகாலத்தில் பயிர் செய்யமுடியாத நிலையும் ஏற்படும். இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (64)

## விழிப்புக்குழு அமைப்பு

நாயன்மார்கட்டு - கல்வியங்காட்டுப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களினால் - அந்த ஊர் வாசிகளும், கோப்பாய் பொலிஸ் அதிகாரி ஸ்ரீ.செல்வம் தலைமையில் விழிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அந்த ஊர் மக்களால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில், முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே விழிப்புக்குழு அமைக்கப்பட்டதாகத தெரியவருகிறது. இந்தக் குழு இரவு நேரங்களில் காவல் கடமைகளில் ஈடுபடுவார்கள் எனத் தெரியவருகின்றது. (64)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு மிக விரைவில் முழுமையாக மின்சாரம் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மின்சார சபையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 195 க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த மின் வழங்கலுக்காக 250 கிலோ வாற் இயந்திரம் பயன்பாட்டுக்கு வருகின்றது. இதன் மூலம் கூடுதலான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கமுடியாத நிலையே இதுவரை இருந்து வந்தது.

தற்போது 1 மெகாவட் இயந்திரமொன்றினை வரவழைக்க எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றியளித்துள்ளதால், இதனால் கூடுதலான மக்கள் பயனடையக் கூடியதாகவ இருக்குமென இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் நிதியில் ஆரம்பிக்கப்படவிருந்த இதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது அந்த நிதி வந்து சேராதபட்சத்திலும், இலங்கை மின்சாரசபையின் நிதியிலேயே துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (கு)



தீவக வலய பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களைப் பார்வையிடுவதைக் காணலாம். [illegible]

## கலந்துரையாடல்

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர், பொதுமுகாமையாளர்கள் [illegible] கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினர் அறிவித்தனர்.

## வன்னிக் கால்வாய் நோய்
## தடுப்பூசி மருந்து தாமதத்தால் கால்நடைகள் இறக்கும் ஆபத்து

கால்நடைகளுக்கான தொண்டை அடைப்பான் தடுப்பூசி வன்னிப் பகுதிக்கு வந்து சேர்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

கால் நடைகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையானது வருடாவருடம் ஜூலை மாதம் முதல்வாரம் மேற்கொள்ளப்படுவது வழமையாகும். இதற்கான தடுப்பூசி சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டு வந்தது.

ஆனால், இந்த வருடத்துக்கான தடுப்பூசியானது ஓகஸ்ட் மாத நடுப் பகுதியைத் தாண்டியும் இன்னமும் வந்து சேரவில்லையாதலால், வன்னியில் கால்நடை வளர்ப்போரும், பெரும்பட்டி வைத்திருப்போரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்தோடு மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால், காலதாமதமாக தடுப்பூசி வந்தாலும் பெரும்பகுதி கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்றும், கால்வாய் நோயின் தாக்கம் அதிகரித்து கால்நடைகள் இறக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளதாக வன்னிப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

### சிந்தனைக்கு

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் சுயம் வெளிப்படும் நேரம்...!

கடைசியில் ஜனாதிபதி சந்திரிகா தான் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை வெளிப்படையாக கூறியேவிட்டார்.

அவரால் இப்படித்தான் கூற முடியும் என்பதும் இதனைத் தவிர வேறொரு முடிவை அவரால் எடுக்க முடியாதென்பதும், தமிழ் மக்கள் அறிந்த விடயமே என்பதால் இது குறித்து எவரும் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ அடையவில்லை.

இதைவிடுத்து அவர் சமாதானம் தொடர்பாகவோ, அதில் தான் உறுதியாகச் செயற்படப்போவதாகவோ, அதற்கு எதிரான சக்திகளைப் புறந்தள்ளி நிராகரிக்கப் போவதாகவோ, அவர் கூறியிருப்பாரேயானால் அது குறித்து தமிழ் மக்கள் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்திருப்பார்கள். 1995 முதல் 2002 வரையிலான ஏழாண்டு கால அவரது இருண்ட ஆட்சியின் போது யுத்த வெறியுடன் அவர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளின் கொடூரங்களையும், இழப்புகளையும் எதிர்கொண்டு பொருளாதார அழுத்தங்களையும், மனித உரிமை மீறல்களையும் தாங்கி அவர்கள் வாழ்ந்த அவல வாழ்வு ஜனாதிபதியின் ஈவிரக்கமற்ற இதயத்தை அவர்களுக்கு மிக நன்றாகவே உணர்த்தியுள்ளது.

இந்தப் பட்டறிவு அனுபவம் தமிழ் மக்களுக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு மீதான நம்பிக்கையை எப்போதோ நீக்கிவிட்டது என்பதும் உண்மையே. இது அவர்களுக்கு அமைதித்தீர்வு மீது நம்பிக்கையில்லை என்பதைக் குறிப்பதாகாது. அமைதிக்காக முயற்சிப்போம் சமாதானத்துக்காகப் பேசுவோம், அடக்குமுறையெனின் தகர்த்தெறிவோம் என்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கே காலமும் வரலாறும் அவர்களுக்கு கற்பித்துக் கொடுத்துள்ளது.

- இப்போது விடயத்துக்கு வருவோம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினுள் ஏற்பட்ட உட்பகை காரணமாக எழுந்துள்ள மோதல் நிலையானது நாட்டின் ஸ்திர நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்துமானால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அணிவகுத்துச் செல்லுமாறு படையினருக்கு உத்தரவிடுவேனென ஜனாதிபதி சந்திரிகா யு.பி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு வழங்கய பேட்டி ஒன்றில் கூறியுள்ளார் என்ற செய்தியானது மக்களிடையே பொதுவாக சமாதானம் விரும்பிகளான சாதாரண பொது மக்களிடையே ஓர் அச்ச நிலையை உருவாக்கியுள்ளது.

அறுதிப்பெரும்பான்மை வலுவற்ற- ஸ்திரத்தன்மையற்ற- முரண்பாடுகளின் மூட்டையாகவுள்ள அரசாங்கம் ஒன்றின் அதிகார வலுக்கொண்ட தலைவியாக விளங்கும் ஜனாதிபதியால்- இந்த நாட்டிறகு உறுதியானதும், வளம்மிக்கதுமான ஆட்சியை எந்த வகையிலும் வழங்கமுடியாத நிலையிலுள்ள சூழலில் தேர்தலினபோது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாதுள்ளதென்பது தெரிந்த விடயமேயாகும்.

சர்வதேச கடன்கள் மற்றும் நிதியுதவிகளின் துணையின்றி ஆட்சியை தொடர்ந்து நடத்த முடியாமலும்- பொருளாதாரம் சரிவு நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நிலையிலும் தள்ளாடிக் கொண்டிருக்கும் அரசுக்கு இவற்றிலிருந்து மீட்சிகாண சமாதான முயற்சிகளைச் சரியாகவும், நீதியாகவும், பரந்த மனத்துடனும் முன்னெடுப்பதைத் தவிர வேறு மார்க்கமே கிடையாது என்பது நாடறிந்த உண்மை.

சமாதானம் ஆரம்பத்தில் நம்பிக்கையூட்டும் வகையிலான சமிக்ஞையை வழங்கியபோது, போரினால் நைந்துபோயிருந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு நம்பிக்கையூட்டும் நிலை தோன்றியதென்னவோ உண்மைதான். ஆனால், காலஞ்செல்ல அந்த நம்பிக்கை உணர்வும் காலமாகிக்கொண்டே வந்ததும் நிஜமே.

இன்று சமாதான முயற்சிகள் யாவும் முற்றாகவே நகர்வற்ற தன்மையை எட்டியுள்ள நிலையில், அரசியல் மாறி, ஆட்சியும் மாறிவிட்டது. புதிய ஆட்சிப் பீடம் சமாதான எதிர்ப்பாளர்களால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணலாம் என்ற நம்பிக்கையை இன்றைய அரசின் நிலைப்பாடும், ஜனாதிபதியின் செயற்பாடும் முற்றாகவே தகர்த்தழித்து விட்டதென்றால் மிகையில்லை.

சமாதானம் என்ற சொல்லை வெறுமனே நாவளவில் உச்சரித்துக்கொண்டே காலத்தைக் கடத்திவிடலாம் என நினைக்கும் ஜனாதிபதியின் அரசியல் மூலோபாயம் அவருக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் கூட நன்மை பயக்கும் ஒன்றாக ஒருபோதுமே இருக்கப் போவது கிடையாது என்பது மட்டும் உறுதி.

கடந்த அரசின் ஈராண்டுக்கும் சற்று அதிகமான கால சமாதான முன்னெடுப்புக்களால் விளைந்த அனுகூலங்களின் மூலம் அரசியல் ஆதாயங்களைப் பெற்றுள்ள அரசின் தற்போதைய நடவடிக்கைகள் ஏற்கனவே பெற்றதையும் இழக்கவைக்கும் தன்மை கொண்டவையாகவேயுள்ளன.

இதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஜனாதிபதியின் யு.பி.ஐ. செய்தி நிறுவனத்திற்கான பேட்டியேயாகும்.

கிழக்கில் கருணாவினால் ஏற்பட்ட நெருக்கடி நிலை இவ்வளவு மோசமான சூழலை உண்டு பண்ண கருணாவுக்கு அரசும், இராணுவப் புலனாய்வுத் துறையும வழங்கிய மறைமுகமான பாதுகாப்பும் ஆதரவுமே காரணமாகும். என்பது வெளப்படையான உண்மையேயாகும்.


கருணாவை வைத்து ஒரு அரசியல் சூதாட்டம் ஒன்றை ஆடி, அதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ் தேசியதின் வளர்ச்சிப் போக்கையும் சிதைக்கப் போட்ட அரசின் திட்டம் இவ்வளவு மோசமான தோல்வியைக் காணும் என்று ஜனாதிபதி கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

பிரதேசவாதத்தைக் கருணா மூலம் வளர்த்து வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகக்கோட்பாட்டை உடைக்க மற்றும் விடுதலைப்புலிகளுக்கு எரிச்சலூட்டி அவர்களை போருக்கு வலிந்திழுக்க கருணா கும்பலைப் பயன்படுத்தி வன்முறைகளை வளர்க்க எடுத்த முயற்சிகளும், திட்டங்களும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்ட நிலையில்-ஜனாதிபதியால் எதுவுமே செய்யமுடியாதுள்ளமையானது அவருக்கு குயுத்தியான சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது என்றே கூறவேண்டும்.

கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க இராணுவத்தை அணிவகுத்துச் சென்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள- தான் உத்தரவிடுவேன் என்பது ஜனாதிபதியின் சமாதானத்துக்கான யுத்தத் தத்துவம் இன்னமும் அவருக்குள் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருப்பதையே உணர்த்துவதாகவுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவப் புலனாய்வுத் துறையினர் கருணா கும்பலை குழப்பத்தை உண்டுபண்ணுமாறு ஏவிவிடாமல் தடுத்தால் போதுமே...! கிழக்கு அமைதியாகிவிடுமே...! ஆனால், அவர் இதைச் செய்ய உத்தரவிடமாட்டார். ஏனெனில், அவரது பாரம்பரிய சுபாவமே அதுதான். அதாவது தமிழ் மக்களுக்கு உரிமையை வழங்கி சமாதானமாக வாழ அவருக்கு எவரும் கற்பிக்கவில்லை.

## நாடும் நடப்பும்



செய்தி :-
கிழக்கிற்கு-புலிகள் பகுதிக்குள் அரச படைகளை அணிவகுத்து அனுப்புவேன் - ஜனாதிபதி எச்சரிக்கிறார்.

# சாவகச்சேரி-சங்கானை பஸ் சேவை; மீளவும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரியில் இருந்து கனகன்புளியடி, புத்தூர், சுன்னாகம் ஊடாக சங்கானை வரை செல்லும் 775 ஆம் இலகக பஸ் சேவையை மீள ஆரம்பிக்கும்படி மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையைக் கோரியுள்ளது.

சாவகச்சேரி, சுன்னாகம், சங்கானை முதலிய முக்கிய சந்தைகளை இணைக்கும் சேவையாக இது விளங்குவதாலும், சாவகச்சேரியில் இருந்து புத்தூர் வரையில் மேற்படி வீதியினூடாக வேறு போக்குவரத்து வசதிகள் ஏதுவும் இல்லாததாலும் விவசாயிகள், மாணவர்கள், அரச அலுவலர்கள் உட்பட அனைத்துப் பொதுமக்களும் பாதிப்படைகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு 2000 ஆம் ஆண்டு மே மாதத்துடன் இடைநிறுத்தப்பட்ட இந்தச் சேவையை மீளவும் ஆரம்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் பல தடவைகள் மட்டுவில் வடக்குப் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தும், இதுவரை இந்தச் சேவையை நடத்தாது ஏனோ தானோ எனப் போக்குவரத்துச் சபையினர் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். (24)

## மட்டுவில் வீதிகளை புனரமைக்குமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை

மட்டுவில் வடக்குப் பகுதியிலுள்ள வீதிகளைச் செப்பனிட்டுத் தருமாறு மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி கிராமத்திலுள்ள தோப்பு ஒழுங்கை, சந்தர மௌலீச வித்தியாசாலை ஒழுங்கை, முத்துமாரி அம்மன் கோயில் வீதி, பொற்கொல்லர் வீதி, பனையடிப் பிள்ளையார் கோயில் வீதி, சந்தையடி ஒழுங்கை என்பனவே மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

அத்துடன் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின் இந்த வீதிகள் எல்லாம் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. இவற்றைச் செப்பனிட்டுத் தருமாறு கோரியே மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் அனுப்பியுள்ளது. (24)

## வாக்காளர் இடாப்பு திருத்தும் பணி நெடுந்தீவு செயலகத்தில் ஆரம்பம்

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 2004 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் திருத்தம் தொடர்பான வேலைகள் கிராம அலுவலர்களூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரைக்கும் தமது பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யாதவர்கள் மற்றும் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்தோரும் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளும்வகையில் கிராம அலுவலர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

வாக்காளர் இடாப்பில் ஏற்கனவே தங்கள் பெயர் பதியப்பட்டுள்ளதா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அலுவலக நேரத்தில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பைப் பார்வையிடலாம் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (113)

## மாநகர ஆணையாளர் இந்தியாவுக்கு விஜயம்

யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் கலாநிதி க.குணராஜா இந்தியாவின் மும்பாய் நகரத்தில் இடம்பெறவுள்ள நகர அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காகவே இந்தியா சென்றுள்ளார்.

இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 23 ஆம் திகதிமுதல் 29 ஆம் திகதிவரை மும்பாயில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாநகர சபை ஆணையாளருடன், மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர், காத்தான்குடிப் பிரதேசசபை ஆணையாளர், கிளிநொச்சி நகரசபையின் விசேட ஆணையாளர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து செல்லும் 6 பேரில் 4 பேர் வட-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(லெ)

## இணுவில் கிழக்கில் இலவச மனைப்பொருளியல் வகுப்பு

இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தினால் இலவச மனைப்பொருளியல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

இணுவில் மத்திய கல்லூரியில் வார நாட்களில் மாலை 3 மணிமுதல் 5 மணிவரை நடைபெறுகின்ற பயிற்சி வகுப்பில் ஆர்வமுள்ள யுவதிகளும் இணைந்து கொள்ளலாம்.

இரண்டு மாத இலவச மனைப்பொருளியல் பயிற்சி வகுப்பு நிறைவில் முழுமையாக பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தினர் தெரிவித்தனர். (91)

## இளங்கலைஞர் மன்றத்தில் தெய்வீக இசையரங்கு

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தில் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சிகள் இடமபெறவுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை இளங்கலைஞர் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற இந்த இசையரங்கில் பல இயல், இசை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளது.

இங்கு தெய்வீக இசை அரங்கு நிகழ்ச்சியில் தமிழ் சாகித்தியங்கள் மாத்திரம் பாடப்படுதல் குறிப்பிடத்தக்கதாகும்.(கு)

# போலிக் கல்விச் சான்றிதழ்கள் வழங்கியோரின் நியமனங்கள் ரத்து

(கொழும்பு)

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் நியமனங்களின்போது சிலர் போலிக் கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்குக் கடந்த வருடம் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வாறு தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய சிலர் க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடையாதபோதும், சித்தியடைந்ததாகப் போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

நியமனம் வழங்கப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களை கொழும்பிலுள்ள பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி உறுதிப்படுத்த முற்பட்டவேளையிலேயே போலிச் சான்றிதழ்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வாறு போலிச் சான்றிதழ்கள் சமர்ப்பித்த இருவருக்கு வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பலர் இவ்வாறு போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும், அவர்களது நியமனங்களும் ரத்துச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நஜாவ் நகர் மீதான தாக்குதல்களும் நெருக்கடிக்குள்ளாகும் அமெரிக்காவும்

- கே.ரீ.கணேசலிங்கம்

ஈராக் நகரங்கள் மீது சிறிய யுத்தங்கள் தொடருகின்றன. ஈராக்கிய மக்களுக்காக உருவாகியுள்ளதாகக் கூறப்பட்ட இடைக்கால அரசு ஈராக்கிய மக்களை அழிவுக்குள்ளாக்கும் யுத்தத்தைத் தவிர்க்க முடியாது ஆதரித்து வருகிறது. ஈராக்கிய இடைக்கால அரசு நிறுவப்பட்டபோது ஏற்பட்ட விமர்சனங்களில் ஒன்றாக விளங்கிய அமெரிக்கப் படைகளின் பிரசன்னம் - இடைக்கால அரசை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இடைக்கால அரசு எதிர்கொண்டுள்ள பிரதான நெருக்கடியாக வர்ணிக்கப்படும் நஜாவ் நகர் மீதான தாக்குதல் - அமெரிக்கப் படைகளின் அடிப்படை நோக்கத்தை நிறுவியுள்ளது. ஒரே நாளில் நூற்றுக்கு மேற்பட்டவர்களை அழிவுக்குள்ளாக்கிய நஜாவ நகர் மீதான இராணுவத் தாக்குதல் ஈராக்கின் அரசியலில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளைப் பரிசீலிப்போம்.

**தாக்குதலின் விளைவுகள் இடைக்கால அதிகாரிகளை அதிகம் பாதித்துள்ளன. சதாமை வீழ்த்தியபோது மிட்டாய் கொடுத்து மகிழ்ந்த ஷியா முஸ்லிம்கள் இன்று கண்ணீர் வடிக்கின்றனர். இதற்கு ஈராக்கியரே பொறுப்பு. எதிரியை வீழ்த்துவதற்காக அந்நியரிடம் அடிமையாகும் ஆட்சியாளருக்கும், மக்கள் கூட்டத்துக்கும் இந்தச் செயல் நல்ல அனுபவமாக அமையட்டும்.**

நஜாவ் நகர் மீதான தாக்குதல் தற்செயலான நிகழ்வு அல்ல. இடைக்கால அரசும், அதன் அமெரிக்கக் கூட்டும் இணைந்தே திட்டமிட்டிருந்தது. இதற்கு உடனடியான ஆதாரமாக விளங்குவது அல் - ஜசீரா தொலைக்காட்சியின் ஈராக் அலுவலகத்தை ஒரு மாதத்துக்குத் தற்காலிகமாக மூடுவதென, இடைக்காலப் பிரதமர் அறிவித்தமையாகும்.

ஈராக்கின் நஜாவ் மட்டுமன்றி அமரா, சதாப் போன்ற நகரங்களில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததுடன் அது பற்றிய உண்மைத் தகவல்கள் வெளியாகிவிடும் என்பதோடு அமெரிக்காவின் பதில் தாக்குதல்களால் ஏற்படும் பாதிப்புகள் அம்பலமாகிவிடும் என்றுமே இடைக்கால அரசும், அமெரிக்கத் தரப்பும் அச்சமடைந்தன. தலை துண்டிக்கப்படும் காட்சியை வெளியிடும் நடவடிக்கை தீவிரவாதத்தைத் தூண்டிவிடுவதென்ற குற்றச்சாட்டை முன்வைத்து மூடியதென்பதல்ல உண்மையான காரணம். சதாம் ஹுசைன் கைதுக்குப் பின்னர் நிறுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்ட தாக்குதலும், இடைக்கால அரசு அமைக்கப்பட்ட பின்பு தீவிரவாத நடவடிக்கை நின்றுவிடுமென்ற நம்பிக்கையும் அமெரிக்காவுக்கு தகர்ந்துவிட்டது. இடைக்கால அரசை அப்படியே வைத்துக்கொண்டு தாக்குதலையும் ஆதிக்கத்தையும் பேணலாம் என்று அமெரிக்கா கருதிவந்தமை தீவிரவாத நடவடிக்கையால் ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது. இதனால், சிறு யுத்தங்களை அரங்கேற்ற வேண்டிய நிலைக்குள் அமெரிக்க இராணுவம் தள்ளப்பட்டுள்ளது.

அல் - ஜசீரா தொலைக்காட்சி தகவல் யுகத்தில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. 1990 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தத தொலைக்காட்சி சேவை மேற்கின் ஆதிக்கத்தையும், மேற்கின் ஆதிக்க ஊடகங்களையும் எதிர்த்த மிக முக்கியமான தொலைக்காட்சி சேவையாகும். இதுவே, மேற்கின் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைக்கு எதிராக முதன்முதல் குரல்கொடுக்கத் தொடங்கியதுடன், அத்தகைய சேவையை நிறைவேற்றியும் வருகின்றது. ஈராக்கில் நிகழ்ந்த உண்மைகளை அம்பலப்படுத்தி வருவதுடன் அமெரிக்க ஆக்கிரமிப்பையும், அதற்குத் துணைபோகும் இடைக்கால அரசையும் முழுமையாகச் சாடிவருகின்றது. இதுவே ஈராக்கில் அல் - ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் தற்காலிகமாக மூடப்படுவதற்குக் காரணமாகும். எனவே, அமெரிக்கா தாக்குதலைத் திட்டமிட்டே மேற்கொண்டது. இந்தத் தாக்குதல் மூலம் ஏற்படவுள்ள அரசியல் விளைவுகளை இரண்டு வகையாக நோக்கலாம்.

ஒன்று - நேரடியாக ஏற்படவுள்ள அரசியல் விளைவு, வெளிப்படையாக தாக்குதலின் உக்கிரம் பெரும் யுத்தம் ஒன்று நிகழ்ந்தது போல் நஜாவ் நகரமும் அதன் பிரதேசமும் காட்சியளிக்கின்றது. சதாரின் படைகளை எதிர்த்து மிகத் தீவிரமாக அமெரிக்கப்படைகள் நிகழ்த்திய தாக்குதல்கள் அனைத்தும், இலக்குத் தவறி அப்பாவி மக்களையே அதிகமாகத் தாக்கியுள்ளது. அமெரிக்காவின் உத்தியாகக் கூட அதனை மதிப்பீடு செய்யமுடியாதென்றமை தெரியவருகின்றது. மக்களையும், தீவிரவாதத்தையும் பிரித்தெடுக்க முயலும் ஆக்கிரமிப்பு அரசுகள் பயன்படுத்தும் அதே உத்தியைத்தான் அமெரிக்காவும் ஈராக்கில் பயன்படுத்தியுள்ளது. இதனை ஆரம்பித்ததே அமெரிக்கா என்பதை மறுக்கமுடியாது. மக்களை அழிப்பதன் ஊடாக இடைக்கால அரசையோ, அமெரிக்கப் படைகளையோ கண்டு மக்கள் அஞ்சுவதுடன், ஆட்சிக்குக் கட்டுப்படுத்தலாமென்ற குறுகிய நோக்கோடு அமெரிக்கத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.


அத்துடன், தாக்குதல் செய்யப்பட்ட முறைமையும் அந்நிய இராணுவம் மீது ஒரு போரைத் தொடுத்தது போல் அமெரிக்கா நிகழ்த்தியுள்ளது. எப்படி சதாம் ஹுசைனை மடக்க அமெரிக்கா ஆகாய விமானத் தாக்குதல்களை நிகழ்த்தியதோ, அவ்வாறே நஜாவ் நகரை அமெரிக்கப் படைகள் தாக்கின. குறிப்பாக விமானத் தாக்குதல் மற்றும் குண்டுத் தாக்குதல்களை அடுத்தே டாங்கிகளின் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. அதனையடுத்தே நிலத்தில் படைகள் ஈடுபடுத்தப்படும் காட்சிகள் வெளிவருகின்றது.

இந்தத் தாக்குதலின் வடிவத்தினை அவதானித்தால் - ஈராக் மேலும் பல ஆட்சியாளரின் இராணுவத்தைக் கொண்ட அரசாகவே விளங்குகின்றதென்பது புலனாகின்றது. அமெரிக்கா கூறுவதைப் போன்று ஈராக் இலகுவாக வெல்லப்படக்கூடிய தீவிரவாதத்தையோ அல்லது இலகுவான ஆட்சியைக் கொண்டிருக்கக்கூடியதல்ல என்பதைத் தாக்குதல் நிறுவியுள்ளது.

அடுத்த இடைக்கால அரசு சங்கடமான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஒரு பக்கம் அமெரிக்கப் படையும், அமெரிக்க ஆட்சியாளரும் மறுபக்கம் ஈராக்கிய மக்களும், தீவிரவாதமும், மக்களைக் கருத்தில் கொள்ளாத இடைக்கால அரசின் ஆட்சி அடுத்துவரும் [illegible]களில் பிசுபிசுத்துவிட வாய்ப்புள்ளது.

மக்களை அழிக்கும் இராணுவ நடவடிக்கையால் இடைக்கால அரசு குழம்பியிருப்பதுடன், ஆளுனர் பதவி விலகியதுடன் இடைக்கால அரச அதிகாரி ஒருவர் - அமெரிக்கப் படைகளை நஜாவ் நகரை விட்டு வெளியேறுமாறு கோரியுள்ளார். எனவே, இவையாவும் இடைக்கால அரசுக்குள்ளே குழப்பம் ஏற்பட்டுள்ளதென்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. இதனால், இடைக்கால அரசுக்கு எதிரான கோஷங்கள் வலுக்கும்.

தற்போதைய நிலையிலேயே ஷியா முஸ்லீம்கள் வாழும் அனேகமான இடங்களிலுள்ள மக்கள் வீதிகளில் இறங்கி அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்ததுடன் அமெரிக்காவும், ஈராக்கின் இடைக்கால பிரதமரும் அல்லாவின் எதிரிகளெனக் கோஷமிட்டனர். இடைக்காலப் பிரதமர் இந்தத் தாக்குதலுக்குத் தாம் உத்தரவிடவில்லையென முஸ்லீம்களின் இயல்பான வேலையைச் செய்துள்ளார். ஏனெனில், தாக்குதலின் விளைவுகள் இடைக்கால அதிகாரிகளை அதிகம் பாதித்துள்ளன. சதாமை வீழ்த்தியபோது மிட்டாய் கொடுத்து மகிழ்ந்த ஷியா முஸ்லீம்கள் இன்று கண்ணீர் வடிக்கின்றனர். இதற்கு ஈராக்கியரே பொறுப்பு. எதிரியை வீழ்த்துவதற்காக அந்நியரிடம் அடிமையாகும் ஆட்சியாளருக்கும், மக்கள் கூட்டத்துக்கும் இந்தச் செயல் நல்ல அனுபவமாக அமையட்டும்.



இந்தத் தாக்குதலின் நேரடி விளைவுகளைக் காட்டிலும் மறைமுகமான விளைவுகளே அதிகமெனக் கூறலாம். அமெரிக்கப் படைகள் இதுவரை சதாமையும் அவரது சனி முஸ்லீம்களையுமே அதிகமான தாக்குதலுக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கி வந்தது. ஆனால், தற்போது அமெரிக்கா தொடங்கியிருக்கும் நடவடிக்கை அதிக ஆபத்தானதும், அதிக விலைகொடுக்க வேண்டியதுமாகும். குறிப்பாக ஷியா முஸ்லீம்களின் தனித்துவம், பலம் ஏனைய பிரிவுகளைக் காட்டிலும் வித்தியாசமானது. இலக்குவில் விலைபோகாதது மட்டுமன்றி இலட்சியத்தோடும், தேசப்பற்றுதலோடும் சற்று இறுக்கமான பிடிப்புக் கொண்டது. மேற்காசியா முழுவதுமே ஆதிக்கமுடைய ஷியா முஸ்லீம்கள் விட்டுக்கொடுப்பற்ற அரசியல் போட்டிக்குள் தம்மை ஈடுபடுத்தக்கூடியது. அந்த வகையில் பலமான சக்தியாக விளங்கும் ஷியா முஸ்லீம்கள் சதாமை எதிர்த்தபோதும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாதவர்களாக அப்போது காணப்பட்டனர்.

தற்போது அமெரிக்காவை எதிர்க்கும் பலமுடையவர்களாக மட்டுமன்றி ஆட்சிக்குப் போட்டியிடும் பிரிவினராகவும் ஷியா முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். அத்துடன், ஈராக்குடன் ஷியா முஸ்லீம்களின் பலம் முற்றுப் பெறக்கூடியதல்ல. காரணம் ஷியா முஸ்லீம்களின் தீவிரவாத நடவடிக்கையோடு ஈரான், சிரியா போன்றவற்றுக்கும் அதிக தொடர்பு காணப்படுகின்றது. இதில் ஈரான் - ஈராக்கிலுள்ள ஷியா பிரிவுக்கு மட்டுமன்றி அனைத்துப் பிரிவுக்கும் இராணுவ, பொருளாதார உதவிகளை அளித்து வருகின்றது. இதனை ஒரு தடவை இடைக்கால அரசு கண்டித்தது குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதும், ஈரான் இராணுவ உதவி மட்டுமன்றி, இராணுவ ரீதியான ஆளணிகளையும் ஈராக்குக்கு அனுப்பி வருவதாகவும் தெரியவருகின்றது.



இதனால், ஈரான், சிரியா என்பன அமெரிக்காவின் அடுத்த இலக்கு என்பதால் அதனை முறியடிக்க ஈராக் பொருத்தமான களமென ஈரான், சிரியா கருதுவதால், தீவிரவாத நடவடிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. நஜாவ் நகரத்தை அமெரிக்கப் படைகள் சுற்றி வளைத்தாலும், ஈராக்கின் ஏனைய நகரங்கள் மீதும் இதே விளைவுகளை அமெரிக்கப் படைகள் சந்திக்க வேண்டியிருக்கும்.

மேலும் அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கையால் பாதிப்படைந்துள்ள ஷியா முஸ்லிம்கள் - தீவிரவாதத் தாக்குதலை அதிகம் மேற்கொள்ள முயலுவார்கள் என்பதுடன், தீவிரவாதத்தை முறியடிக்க முடியாத நிலைக்கு ஷியா முஸ்லீம்களின் நடவடிக்கை இட்டுச் செல்லும். ஷியா பிரிவு முஸ்லீம்களில் இயல்பாக விளங்கும் பண்புகள் நீண்ட காலத்துக்குப் பின்பு அமெரிக்காவுக்கும், இடைக்கால அரசுக்கும் நெருக்கடியான அரசியலைத் தோற்றுவிக்கும்.

அமெரிக்கா ஈராக்கைக் கைப்பற்றிய பின்னர் நிகழ்த்தும் தாக்குதலால் தனது அரசியல் வங்குரோத்துத்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பின்பு இப்படியான தாக்குதல்கள் நிகழ்த்துவது ஈராக் மீதான போரின்போது காணப்பட்ட பலவீனத்தையே அமெரிக்காவுக்கு நினைவுபடுத்தியுள்ளது.

பிரான்சிய பின் நவீன தத்துவ சிந்தனையாளர் குறிப்பிட்டது போல்- ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போர் வெறும் தொலைக்காட்சி யுத்தமாகவே இருந்தது. அதனால், அமெரிக்கா ஈராக்கை இலகுவாகப் பிடித்தது என்பது சரியானதுதான். ஆனால், ஈராக்கை அமெரிக்கா உண்மையாகப் பிடிக்கவில்லை என்றும், போர் உண்மையாக நிகழவில்லை என்றும் போத்ரிலார் வர்ணித்தார். அப்படியானால் அமெரிக்காவுக்கு எதிரான அல்லது அமெரிக்கா - ஈராக்குக்கு எதிரான நிஜ யுத்தம் தற்போதுதான் ஆரம்பித்துள்ளது எனக் கருதலாம் போல் தெரிகின்றது.

அமெரிக்க ஆதிக்கம் மைக்கல் கொஸ் என்ற அமெரிக்கர் கூறுவது போல் இராணுவ ரீதியானது மட்டுமேயாகும். அதன் தந்திரோபாயமும், ராஜதந்திரமும் எல்லாம் இராணுவ உபாயத்தில் தங்கியுள்ளதேயன்றி அரசியலில் இல்லை என்பது ஈராக் அரசியலில் யதார்த்தமாகி விட்டது. அமெரிக்கர்கள் அரசியல் பணி எதனையும் ஈராக்கில் ஆற்றவில்லை. மாறாக இராணுவ அழிவுகளையும், அதனுடனான தாக்குதல்களையும் நிகழ்த்துவதன் ஊடாகவே ஈராக்கியரை அழித்துவிடலாமென கருதுகின்றது போல் காணப்படுகின்றது. இத்தகைய வழிமுறை ஈராக்கிய மக்களிடம் அரசியல் பிரசாரமாக மாறுமாயின், அமெரிக்க இராணுவத்துக்கும் இடைக்கால அரசுக்கும் அதிக ஆபத்தும், அச்சுறுத்தலும் ஏற்படும்.

அமெரிக்க தாக்குதல்கள் வெளிநாட்டவர் மீதான தீவிரவாதத்தின் நடவடிக்கையை அதிகரிப்பதுடன் இஸ்லாமிய தீவிரவாதத்தின் கூட்டான நடவடிக்கைக்கும் வழிவகுக்கும். கூட்டான நடவடிக்கை முழு மேற்கிலும் இஸ்லாமிய அரசுகளிலும் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும். இராணுவ அழுத்தங்கள் அமெரிக்காவினால் அதிகரிப்பது போன்று அமெரிக்காவுக்கு தீவிரவாத அழுத்தம் அதிகரிக்கும்.

முடிவாக அமெரிக்காவின் நஜாவ் மற்றும் ஏனைய ஈராக் நகரங்கள் மீதான தாக்குதல்கள் அமெரிக்க ஆட்சியாளருக்கும், அமெரிக்க இராணுவத்துக்கும் ஆபத்தான நகர்வாகும். ஜனாதிபதி புஷ்ஷின் தேர்தல் வெற்றிக்கான தாக்குதலாக இது விளங்கினாலும், மறைமுகமான பாதிப்புகளை அதிகம் ஏற்படுத்தக் கூடியது. ஷியா முஸ்லீம்களின் ஆத்திரத்துக்குள்ளாகியுள்ள அமெரிக்கா - அதிக பாதிப்பை உடனடியாக எதிர்கொள்ளாவிட்டாலும் எதிர்காலத்தில் எதிர்கொள்ளவேண்டி ஏற்படும். அவ்வாறே தீவிரவாதம் - தந்திரமாகவும், நுட்பமாகவும் அமெரிக்காவை எதிர்கொள்ளாது விட்டால், சதாம் ஹுசைன் போன்ற நிலைதான் சதாருக்கும் ஏற்படும். ஆனால், சதார் - சதாம் போன்ற ஆட்சியாளனல்ல. ஷியா முஸ்லீம்களின் தலைவன் என்ற வகையிலும் வேறுபடுத்திப் பார்க்கமுடியும்.

எதுவாயினும் அமெரிக்காவின் இலக்கு ஆட்சியாளர்களல்ல, ஈராக் என்பதைத் தீவிரவாதிகள் புரிந்துகொண்டால் மட்டுமே ஆக்கிரமிப்பை முறியடிக்க முடியும். ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேபாள தலைநகர் காத்மண்டுவுக்குச் செல்லும்

# இரண்டு பிரதான வீதிகளின் போக்குவரத்தை மாவோ கிளர்ச்சிவாதிகள் தடைசெய்துள்ளனர்



(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டு விற்குச் செல்லும் இரண்டு பிரதான வீதிகளை போக்குவரத்துக்கு மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் தடைசெய்துள்ளதனால், தலை நகருக்குச் செல்லும் உணவு மற்றும் பிறவிநியோகங்களும் தடைப்பட்டுள்ளன. பிரதான வீதிகள் இரண்டையும் கிளர்ச்சிவாதிகள் தடைசெய்துள்ளதால் அவையிரண்டும் வெறிச்சோடிக காணப்படுவதாகச் செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பாதைகளை போக்குவரத்திற்கு அனுமதிப்பதற்கான எந்த வித அறிகுறியும் கிளர்ச்சிவாதிகளிடம் தென்படவில்லை. கிளர்ச்சிவாதிகளின் அறிவித்தலையடுத்து வாகன சாரதிகள் தமது வாகனங்களைச் செலுத்துவதற்கு அச்சமடைந்துள்ளனர்.

சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது அமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், கொல்லப்பட்ட தமது அமைப்பின் மற்றைய உறுப்பினர்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டுமென கிளர்ச்சிவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் கால வரையறையின்றி தலைநகருக்கான உணவு மற்றும் பிறவிநியோகங்கள் நிறுத்தப்படுமெனவும் கிளர்ச்சிவாதிகள் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

கிளர்ச்சிவாதிகளின் இந்த நடவடிக்கையை அடுத்து நேபாள இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்திய நிலப்பரப்பினூடான நேபாள தரைப்பாதைக்கு இராணுவத்தினரின் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக காத்மண்டுவிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் சார்ல்ஸ் ஹவிலன்ட் தெரிவித்தார்.

குறைந்த பஸ்கள், மினி பஸ்கள் மற்றும் லொறிகள் என்பன பிரதான வீதியின் இரண்டிலும் பயணத்தை மேற்கொண்டன. இவற்றுக்கு இராணுவத் தொடரணி பாதுகாப்பு வழங்கியது.

யாருக்காவது பயணம் செய்யும் வேளை இராணுவப் பாதுகாப்பு தேவைப்படின் அது வழங்கப்படுமென இராணுவத் தளபதியொருவர் உறுதியளித்துள்ளார். அத்துடன் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் தமது பிரசாரத்தின் மூலம் மக்களைப் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

போக்குவரத்தில் ஈடுபடும் சில லொறிச்சாரதிகள் தமது வாகனங்களின் இலக்கத்தகடுகளை மறைத்த வண்ணம் பயணத்தை மேற்கொள்கின்றனர். கிளர்ச்சிவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாகவே இவர்கள் இவ்வாறு செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது விநியோக நடவடிக்கையில் கார் மற்றும் வ்ான்களே ஈடுபட்டுள்ளனவெனவும், லொறிகள் எவையும் அச்சம் காரணமாக வரவில்லை எனவும் காத்மண்டுவிலுள்ள ஐ.நா அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேபாள உள்ளூர் போக்குவரத்துச் சங்கத்தலைவரான ஹிரா உதாஸ் தெரிவிக்கையில் -

மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்ற அச்சம் காரணமாக எந்தவொரு வாகன உரிமையாளர்களும் தமது வாகனங்களை சேவையில் ஈடுபடுத்த தயாரில்லாமல் உள்ளனர்.

படையினரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கே சேவையிலீடுபடும் வாகனங்களுக்குப் பாதுகாப்பை வழங்குவர். ஆனால், அதன்பின் தமது கட்டளையை ஏற்கமறுத்த காரணமெனத் தெரிவித்து கிளர்ச்சிவாதிகள் வாகன உரிமையாளருக்கு தண்டனை வழங்குவார்கள் எனவும் தெரிவித்தார்.

அடுத்த பத்து வாரங்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தலைநகரில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக நேபாள நுகர்வோர் சபை, ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தது.

கிளர்ச்சிவாதிகளின் அறிவிப்பையடுத்து தலைநகருக்கு வரவேண்டிய இரண்டாயிரம் வாகனங்களின் வருகை தடைப்பட்டுள்ளது. அத்துடன் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லமுடியாமல் நேபாளத்தின் பிரதான பஸ்நிலையத்தில் தங்கியுள்ளனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமுகமாக அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலம் அரசாங்கம் தம்முடன் மீளவும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென கிளர்ச்சிவாதிகள் நினைக்கின்றார்கள் போலுள்ளதென ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த நடவடிக்கை மூலம் தலைநகர் காத்மண்டுவை தமது உறுதியான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே கிளர்சிவாதிகளின் இலக்கென நேபாள சஞ்சிகையின் ஆசிரியர் ஹிமால் தெரிவித்தார்.

## விண்ணில் வண்ணக்கோலம் படைத்த விமானங்கள்!



ரஷ்யாவின் மொஸ்கோ நகர் அருகே உள்ள சுவோஸ்கி விமான நிலையததில் சர்வதேச விமானக் கண்காட்சி நடைபெற்றுவருகிறது.

பல்வேறு நாடுகளில் தயாரான விமானங்கள் இதில் சாகச நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றன. இந்திய விமானப்படையைச் சேர்ந்த எம்.பி.-339 ஜெட் விமானங்களும் இதில் கலந்துகொண்டன. மூவர்ணப் புகையைக் கக்கியபடி விண்ணில் இந்த விமானங்கள் வண்ணக்கோலம் படைத்து அனைவரையும் கவர்ந்தன.




# குளோனிங்மூலம் மனிதனை உருவாக்க பிரிட்டன் அரசு அனுமதி வழங்கியது!

மருத்துவ ஆராய்ச்சிக்காக மனித செல்களை குளோனிங் முறையில் உருவாக்குவதற்கு இங்கிலாந்து அரசு அனுமதி அளித்துள்ளது.

தாய் இல்லாமல் செல்மூலம் அந்தத்தாய் போன்ற குணாதிசயங்களைக்கொண்ட குட்டிகளை உருவாக்கும குளோனிங் முறையை முதன் முதலில் இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இவர்கள் 'டோலி' என்ற ஆட்டுக்குட்டியை குளோனிங் மூலம் உருவாக்கினர். ஆட்டில் தொடங்கிய இந்த குளோனிங் முறை பின்பு மாடுகளை, குரங்குகளை உருவாக்க பயன்படுத்தப்பட்டது.

"குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்கிச் சாதனை படைப்போம்." என்று சில விஞ்ஞானிகள் கூறியபோது உலகம் அதிர்ந்தது.

படைப்புத் தொழில் கடவுளுக்கு மட்டுமே சொந்தமானது. அதில் மனிதன் போட்டியிடக்கூடாது என்று பழமைவாதிகள் எச்சரித்தனர். மனிதனை செல்மூலம் செயற்கையாக சோதனைக் குழாயில் உருவாக்குவது விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் எதிர்த்தனர். இதைத் தொடர்ந்து மனித குளோனிங் முறைக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

3 ஆண்டு கால தயக்கத்துக்கு பிறகு கடந்த புதன்கிழமை குளோனிங் முறையில் மனித செல்களை உருவாக்க இங்கிலாந்து அரசு அனுமதி அளித்துள்ளது. உலகிலேயே மனித குளோனிங்குக்கு அனுமதி வழங்கப்பட்டது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் மனித குளோனிங்கைத் தடை செய்துள்ள நிலையில், அமெரிக்கா இதற்கு உலக அளவில் தடை கொண்டுவரவேண்டும் என்று பிரசாரம் செய்துவரும் நிலையில் இங்கிலாந்து அனுமதியளித்து இருப்பது மிகப்பெரிய சர்ச்சையைக் கிளபபும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் முதன் முறையாக குளோனிங் மூலம் 'டோலி'யை உருவாக்கிய பேராசிரியர் அயன் வில்மட் கூறுகையில் - குளோனிங் செய்யப்பட்ட கருவில் இருந்து பெறப்பட்ட செல்கள் நோயைக் குணப்படுத்துவதற்கான ஆராய்ச்சிப் பணியில் முக்கிய பங்காற்ற இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

## ஈராக்கில் இடைக்கால சபை

# அமைப்பது குறித்த பேச்சுகள் நேற்றும் தொடர்ந்து நடந்தது

ஈராக்கில் இடைக்கால சபையொன்றை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

இவ்வாறு அமைக்கப்படும் இந்தச்சபை, அடுத்தவருடம் ஈராக்கில் நடத்தப்படவுள்ள தேர்தலின்பின் அங்கு ஜனநாயகத்தை உருவாக்கும் செயறதிட்டத்தை கண்காணிக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்தக் கலந்துரையாடலில் நஜாவ்வில் இடம்பெறும் யுத்தத்தை எவ்வாறு முடிவிற்குக் கொண்டுவருவது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாகப் பாக்தாத்திலிருந்து சென்ற குழுவினரை சதார் சந்திக்க மறுத்து



விட்டார். இதனால் அந்தக் குழுவினர் மிகவிரைவிலேயே சதாரின் இடத்திலிருந்து திரும்பியுள்ளனர்.

இந்தத் தூதுக்குழுவினரை சதார் அவரது பாதுகாப்பு மற்றும் வந்தவர்களின் தகுதி போன்ற காரணங்களாலேயே சந்திக்க மறுத்துள்ளார். ஆனால, சதாரின் இடத்திற்குச் சென்ற குழுவினர் செய்தியைப் பரிமாறவே சென்றதாகவும், பேச்சுவார்த்தை நடத்தவல்ல எனவும் உதவியாளர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு திரும்பிய தூதுக் குழுவில் இடம்பெற்ற அரசியல் மற்றும் மததலைவர்கள், தாம் மீளவும் சாதகமான முடிவுகளுடன் நஜாவிற்குச் சில நாட்களில் திரும்பவுள்ளதாகத் தெரிவித்தனர்.

நஜாவ்வின் ஆளுநர் பி.பி.ஸிக்குத் தெரிவிக்கையில் -

சதார் தனது ஆயுதங்களைக் கைவிட்டு அரசியலில் இணைந்தால் அதனைத் தான் வரவேற்பதாகத் தெரிவித்தார். ஆனாலும், இராணுவ வழிமுறையைச் சதார் தொடரும்வரை போரும் தொடருமெனத தெரிவித்தார்.

இதேவேளை அன்பர் மற்றும் பஸ்ரா பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களில் ஒரு பிரிட்டன் படைவீரர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் காயமடைந்தார்.

## கொல்லப்பட்ட செச்சின்ய ஜனாதிபதியின்

# நினைவுதினமன்று பிறக்கும் குழந்தைகளுக்கு பணத்தொகை பரிசாக வழங்கப்படவுள்ளது!



செச்சினியாவில் அரசியல் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி அகமட் கட்ரோவ் கொலையான எதிர்வரும் 25 ஆம் திகதி பிறக்கும் குழந்தைகளுக்கு பணத்தொகை வழங்கப்படுமென செச்சினிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அன்றையதினம் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இலங்கை மதிப்பீட்டில் ரூபா 17 ஆயிரம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதேதினம் பிறக்கும் ஆண்குழந்தைக்கு கொல்லப்பட்ட ஜனாதிபதியின் பெயரைச் சூட்டினால அந்தக் குழந்தைக்கான பணப்பரிசு இருமடங்காக வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொல்லப்பட்டதன் பின்னர் அவரின் பெயரே செச்சினியாவில் உள்ள வீதிகளுக்கு வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவரின் பெயரால் செச்சினியாவில் நூதனசாலையொன்றும் அமைக்கப்படவுள்ளது.

செச்சினியாவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஜனாதிபதியின் நினைவுதினம் வரவுள்ளது.

அத்துடன் இவரின் நினைவு தினத் தன்று சிறுவர்களுக்கும் முன்பள்ளி நிலையங்களுக்கும் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளது.

# இஸ்ரேல் படையினரின் தாக்குதல் ஐந்து பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

(டெல்அவில்)

காஸாவில் அமைந்துள்ள வீடொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டதாகவும், இவர்களில் பெரும்பாலானவர்கள் இஸ்லாமிய ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்களெனவும் இஸ்ரேல் தெரிவித்தது.

பலஸ்தீனர்களின் தகவலின்படி ஹமாஸ் அமைப்பின் நடவடிக்கைத் தளபதியான அகமட் அல் - ஜபாரி தங்கியிருந்த வீடொன்றின்மீது விமானமூலம் அல்லது தரையால் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் இராணுவம், ஹமாஸ் பயங்கரவாதிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தங்கியிருந்த வீடொன்றின்மீதே தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவத்தின் பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

காஸாப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சில சடலங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும், இவையனைத்தும் ஹமாஸ் உறுப்பினர்களுடையதெனவும் பலஸ்தீனத் தகவல்கள் தெரிவித்தன. உறுதிப்படுத்தப்படாத தகவலின்படி இறந்தவர்களில் ஜபாரியின் உறவினர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அருகில் வெடிகுண்டு வெடிக்கும் மிகப்பெரிய சத்தமொன்றைத் தாம் கேட்டதாகவும், உடனே வெளியில் வந்து பார்த்தபோது அருகிலிருந்த வீடு முழுமையாக தீப்பற்றி



எரிவதைக் கண்டதாகவும், ஜபாரி தங்கியிருந்த வீட்டின் அருகிலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

முரண்பாடான தகவல்களின்படி ஜபார் காலில் காயமடைந்திருக்க வேண்டுமெனவும், இல்லையெனில் அவர் காயமின்றித் தப்பியிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் ஏவுகணை வீட்டைத் தாக்கிய சத்தத்தைத் தாம் கேட்கவில்லையெனவும், இந்தச் சம்பவம் நடைபெற்றவேளை இஸ்ரேல் ஹெலிகொப்டர் வட்டமிட்டுத் திரிந்ததாகவும் சம்பவத்தை நேரில்கண்ட பலஸ்தீனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடந்த சாஜாஜி மாவட்டம் இஸ்லாமிய ஆயுதக் குழுக்களின் பலம்வாய்ந்த இடமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அனைத்துக்கும் தமிழ் மொழியை பயன்படுத்துமாறு கோரிக்கை!

## சென்னை மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் அனைத்துத் தேவைகளுககும் தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்துவது என்று தமிழ் பாதுகாப்பு இயக்கம் தீர்மானித்துள்ளது.

தமிழ்ப் படஙகளுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டப்படுவது அதிகரித்துள்ளதைக் கண்டித்தும், தமிழ மொழியில் பெயர் சூட்டப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பழநெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ், மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் சேதுராமன், பாவலர் அறிவுமதி, இயக்குநர் தங்கர் பச்சான் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திருமாவளவனும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்ப் படங்களுக்கு தமிழ்ப் பெயர் சூட்டுதல், விளம்பரப்பலகைகள் தமிழில் எழுதப்படல், தமிழ் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் தமிழ் மொழியைக் கற்பித்தல் அத்துடன் இந்துக் கோயில்களில் தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும் என வலியுறுத்துவதுடன் உடனடியாக நடைமுறைப் படுத்துவது என்றும் முடிவெடுக்கப் பட்டது. தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும் என அனைவரும் உரத்த குரலில் தெரிவித்தனர்.

அரசியல் எங்களைப் பிரித்தாலும் தமிழர்களாகவே நாங்கள் ஒன்று சேர்ந்தோம் என்று இந்தக் கூட்டத்தில் திருமாவளவன், ராமதாஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

# கோப்பாய்க்கு சென்றவரை காணவில்லை என முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க்கு சென்று வருவதாகக் கூறிச்சென்ற சகோதரன் இரு தினங்களாகியும் இன்னும் வீடுவந்து சேரவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப் பட்டுள்ளது.

குப்பிளான் வடக்கைச் சேர்ந்தவரும் கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலய ஆசிரியருமான மாணிக்கம் ஜெகதீஸ்வரன் (வயது 30) என்பவரே காணாமற்போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை கோப்பாய்க்கு சென்று வருவதாக கூறி மோட்டார் சைக்கிளில் சென்றிருந்த இவர் இதுவரை வீடு திரும்பவில்லைஎன அவரது சகோதரி விக்னேஸ்வரி யாழ்.மனித உரிமைகள ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

# நாட்டுப்பற்றாளர் இரத்தினத்தின் பூதவுடல் தீயில் சங்கமம்!

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தனது ஆற்றலைக் கணிசமான அளவு வழங்கிவந்த நாட்டுப்பற்றாளர் செல்லையா இரத்தினத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை நாவலர் வீதியில் உள்ள அவரது வீட்டில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் பிற்பகல் 4 மணியளவில் அவரது பூதவுடல் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் - யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறைநாதன் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். பின்னர் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்படமாட்டாது

## ஜனாதிபதி சந்திரிகா உறுதிமொழி

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களுடன் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையின் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது,

முன்னைய ஆட்சியாளர்கள் மேற்கொண்டது போல் கூட்டுத்தாபனத்தின் பங்குகள் ஒருபோதும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படமாட்டாது.

அதேபோல் எண்ணெய் வள நாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு விரைவில் எண்ணெய்யின் விலையேற்றத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முன்வைத்த யோசனைகளையும் ஆராய்ந்து விரைவில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் டானியல் லெனிகம ஆகியோர் கலந்துகொண்டனர். (01)

# கொழும்பிலிருந்து சென்ற சி.ஐ.டி பொலிஸாரால் மட்டக்களப்பில் மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பு தெமட்டகொடப் பகுதியிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற குற்றப்புலனாய்வுத் துறையினர் மூன்று தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு தன்னாமுனைப் பகுதியில் இடம்பெற்றது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தன்னாமுனையைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ஜெயக்குமார் (வயது 25), அருமைநாயகம் ஜெயசீலன் (வயது 28), ஜெயந்திபுரத்தைச் சேர்ந்த எக்தர் றெஜினோல்ட் சில்வா (வயது 27) ஆகிய மூவருமே கைதுசெய்யப் பட்டவர்களாவர்.

இவ்வாறு கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டுசென்ற மூவரில் ஜெயசீலன் என்பவரை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை குற்றப்புலனாய்வுத்துறையினர் விடுதலை செய்ததுடன், மற்றைய இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இவர்கள் மூவரும் ஏன் கைது செய்யப்பட்டாகள் என்ற விபரம் எதுவும் தெரியவில்லை.

### ஓய்வு பெற்ற....

ஓய்வு பெற்ற பொலிஸ்காரரான பி.குணவர்த்தன (வயது 32) சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்தப் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களுக்குள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கது.

### இரண்டு தமிழர்கள்...

கேல் ஆன் (வயது 25), கிரகேஜ் வீதி - சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வராசா ஜெயந்தினி ஆகியோரே கைதுசெய்யப் பட்டவர்களாவர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### புலிகளின்...

முன்னணியை உருவாக்கியபோதே அதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சவாலை எதிர்கொள்ளநேரிடும் என தெரிந்தது. இந்த நிலையில் எந்த ஒரு சவாலையும் சமாளித்து சுதந்திரக்கட்சி வளர்ச்சிபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(01)

### திராணியற்ற....

மையையே இக்கொலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

அண்மைய வன்முறைகள் குறித்து புலன்விசாரணைகளை நடத்த முடியுமே தவிர, அதற்கு அப்பால் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களால் எதனையுமே செய்யமுடியாது.

இதனாலேயே படையினரே இச் சம்பவங்களைத் தடுக்க முயற்சிக்க வேண்டும். இதற்கான சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஏழு வயது....

வீதியால் சென்றவர்கள் மற்றும் அயலவர்கள் சம்பவ இடத்திற்கு ஓடிவர சம்பந்தப்பட்ட நபர் தப்பி யோடிவிட்டார்.

இதன்பின்னர் சிறுமியை பெற்றோர் மன்னார் பொதுவைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கண்காணிப்பு...

பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இழுவைப்படகிலிருந்த பொருட்கள் பற்றித் தெளிவாக எதுவும் தெரியாது. கடற்படையினர் இந்த இழுவைப்படகை கண்காணித்த போதிலும் அதிலிருந்த பொருட்களை அறிந்து கொள்வதற்கு கடற்படையினருக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும், விடுதலைப் புலிகள் மீதான இந்தக் குற்றச்சாட்டு குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

### வாழைச்சேனையில்...

செல்லவோ அல்லது உள்நுழையவோ அனுமதிக்கவில்லை.

வாழைச்சேனையிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் வீடுகள் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தப்பட்டன.

வீடுகளில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்தே தாம் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது தமிழர் ஒருவரின் வீட்டில் நின்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேடுதலில் ஈடுபட்ட படைத்தரப்பினர் பொதுமக்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளீர்களா எனக் கேட்டு மிரட்டியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தம் கச்சாத்தான பின்னர் இடம்பெற்ற சுற்றிவளைப்பாக இது குறிப்பிடப்படுகிறது.

### சமாதான...

ஊடகவியலாளர் மாநாட்டில் உரை நிகழ்த்திய அவர் -

தேர்தல் ஒன்றில் அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவது எனபதற்கு முன்னர் அரசாங்கம் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவை அமைக்கவேண்டும்.

தேர்தலொன்று தற்போதைய நிலையில் அவசரமாக வரப்போவதில்லை, எனில் அரசாங்கம் இந்தப் பிரேரணையை ஏன் அவசரமாக நிறைவேற்ற வேண்டும்.

சமாதானம் தொடர்பாக அரசாங்கத்துக்குள் நிரந்தரக் கொள்கை இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சிக்கு மாற்றாக யோசனை ஒன்றை அரசாங்கம் தயாரிக்கப்போவதாக சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால கூறுகிறார்

ஆனால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. - அப்படியானதொரு தீமானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கிறது. இந்த நடைமுறைகளைப் பார்க்கும்போது நாட்டில் அரசாங்கம் ஒன்று இயங்கவில்லை. நிர்வாகம் சீரற்ற நிலையில் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி பேச்சுவார்த்தை...

நாடு தழுவிய ரீதியில் பொதுமக்களை இணைத்து ஜே.வி.பி. போராட்டங்களை நடத்தும் - உண்ணாவிரதமிருந்து உயிரைக்கொடுத்தேனும் ஜே.வி.பி. நாட்டுக்காகப் போராடும்.

பிறிதொரு யோசனையை உருவாக்குவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல. தற்போதைய ஆளும் கூட்டணியின் பிரதான கட்சி என்ற வகையில் எம்மோடு கலந்தாலோசிக்காது அரசு எந்தவொரு திட்டத்தையும் உருவாக்க முடியாது.

அவ்வாறு எமது கட்சிக்குத் தெரியாமல் அரசு எடுக்கும் முயற்சிகளை எதிர்த்து ஜே.வி.பி. கடுமையாகப் போராடும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 10 | 6 | 4 | 20 |
| ஐக்கிய அமெரிக்கா | 8 | 10 | 8 | 26 |
| ஜப்பான் | 8 | 3 | 2 | 13 |
| அவுஸ்ரேலியா | 6 | 4 | 6 | 16 |
| உக்ரெய்ன் | 5 | 1 | 1 | 7 |
| ரஷ்யா | 3 | 6 | 6 | 15 |
| இத்தாலி | 3 | 4 | 2 | 9 |
| பிரான்ஸ் | 3 | 2 | 4 | 9 |
| நெதர்லாந்து | 2 | 3 | 4 | 9 |
| தென்கொரியா | 2 | 3 | 2 | 7 |
| கிறீஸ் | 2 | 0 | 1 | 3 |
| ருமேனியா | 2 | 0 | 1 | 3 |
| துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| ஜேர்மனி | 1 | 2 | 4 | 7 |
| ஹங்கேரி | 1 | 2 | 1 | 4 |
| போலந்து | 1 | 2 | 1 | 4 |
| ஸ்லோவாக்கியா | 1 | 2 | 1 | 4 |
| ஜோர்ஜியா | 1 | 1 | 0 | 2 |
| தென்ஆபிரிக்கா | 1 | 1 | 0 | 2 |
| பல்கேரியா | 1 | 0 | 2 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| சுவிற்சர்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 1 | 0 | 0 | 1 |
| வடகொரியா | 0 | 2 | 1 | 3 |
| ஒஸ்ரிறியா | 0 | 2 | 0 | 2 |
| கியூபா | 0 | 1 | 4 | 5 |
| பிரிட்டன் | 0 | 1 | 3 | 4 |
| பெலாரஸ் | 0 | 1 | 1 | 2 |
| செக் குடியரசு | 0 | 1 | 1 | 2 |
| சிம்பாப்வே | 0 | 1 | 1 | 2 |
| ஸ்பெயின் | 0 | 1 | 0 | 1 |
| இந்தோனேசியா | 0 | 1 | 0 | 1 |
| இந்தியா | 0 | 1 | 0 | 1 |
| போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| சேர்பியா | 0 | 1 | 0 | 1 |
| பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |
| பிறேசில் | 0 | 0 | 2 | 2 |
| ஆர்ஜென்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| அஸர்பைஜான் | 0 | 0 | 1 | 1 |
| கனடா | 0 | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| டென்மார்க் | 0 | 0 | 1 | 1 |
| மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |
| ஸ்லோவேனியா | 0 | 0 | 1 | 1 |

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல:- 1640 திகதி:- 17.08.2004
வெற்றி இலக்கங்கள்
V 3 2 7 8 5 8
அடுத்த சுப்பர் பரிசு 188 லட்சத்துக்குமேல்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org